விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 28 ஞாயிற்றுக்கிழமை (13.09.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 268




# அமெரிக்க அரசின் ஆதரவுடன் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை

## சட்டமா அதிபர் தகவல்

(கொழும்பு)

பயங்கரவாத தடுப்பு சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் இருக்கும் சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஆதரவுடன் முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்தார். (14ஆம் பக்கம் பார்க்க)

## வேகமாகச் சென்ற காரை நோக்கி படையினர் துப்பாக்கிப் பிரயோகம்

### பலாலி வீதியில் நேற்றிரவு சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார்சைக்கிளை தட்டிவீழ்த்திவிட்டு நிறுத்தாமல் சென்ற காரை நோக்கி படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இச்சம்பவம் நேற்றிரவு 7.30 மணியளவில் கந்தர்மடம் பரமேஸ்வராச் சந்தியில் இடம்பெற்றது.

பலாலி வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரை தட்டி விட்டுச் சென்ற காரை நிறுத்தும்படி பரமேஸ் வராச்சந்தியிலுள்ள காவலரணில் இருந்த படையினர் சமிக்ஞை கொடுத்தனர்.

எனினும் படையினரின் சமிக்ஞையை பொருட்படுத்தாமல் ஓட்டிச் சென்ற காரை நோக்கி படையினர் சுட ஆரம்பித்தனர். இதனால் (14ஆம் பக்கம் பார்க்க)

## ரெலிகொமின் 49 வீத பங்குகள் புலிகளுக்குச் சொந்தமானாதா?

### கேள்வி எழுப்புகிறது ஜே. வி. பி.

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இலங்கை ரெலிகொமின் பங்குகளைக் கொள்வனவு செய்துள்ளதாக கே.பி என்ற குமரன் பத்மநாதன் தகவல் வெளியிட்டுள்ளதாக ஜே.வி.பியின் லங்கா இரித பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் பல அரச நிறுவனங் களின் பங்குகளை கொள்வனவு செய்ய விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருந்ததாகவும் அந்தப்பத் திரிகை குறிப்பிட்டுள்ளது.

ஜப்பானிடம் இருந்து இலங்கை ரெலிக்கொம் பங்குகளை மலேசியத் தமிழரான ஆனந்த கிருஸ்ணனின் மெஹீஸ் நிறுவனம் அதிக விலையில் கொள்வனவு செய்திருந்தது.

இந்தக் கொள்வனவு தொடர்பாக சந்தேகம் நிலவுவதாக ஜே.வி.பி மாத்திரமல்லாது தொழிற்சங்கங்களும் இதற்கு முன்னர் தெரிவித் திருந்தன. ஆனந்த கிருஸ்ணனின் மெஹீஸ் நிறுவனம் இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தின் 49 வீத பங்குகளை கொள்வனவு (14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா-யாழ்.பஸ் சேவையை காலையில் ஆரம்பிப்பதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவையை காலை 9 மணிக்கு ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடையாததால் இன்று அதனை மேற்கொள்ள முடியாதுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

வவுனியாவிலிருந்து ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவையை இன்றிலிருந்து காலை 9 மணிக்கு ஆரம்பிக்குமாறு வடமாகாண ஆளுநர் சகல தரப்பினருக்கும் அறிவித்திருந்தார்.

எனினும் அதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகாத நிலையில் அடுத்த சில தினங்களில் இச்சேவையை காலை 9 மணிக்கு ஆரம்பிக்க முடிபு செய்துள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார். இதே வேளை வவுனியா ரம்யா இன்னில் நேற்றுக்காலை 7.30 மணிக்கே யாழ்.வருவதற்கான பதிவுகள் ஆரம்பமானதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## சர்வகட்சிக் குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கவில்லை

### செயலாளர் உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகாரத்தைப் பகிர்வதற்காக சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதி அறிக்கையோ அந்த யோசனைகள் அடங்கிய அறிக்கையின் சுருக்கமோ சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவரினால் ஜனாதிபதிக்கு வழங்கப்படவில்லையென அவரது செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

சர்வகட்சிக்குழுவின் கூட்டங்கள் நடைபெறும் விதம் தொடர்பான சாதாரண இடைக்கால அறிக்கை மாத்திரமே திஸ்ஸ விதாரணவினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டதாக வீரதுங்க கூறியுள்ளார்.

எனினும் சர்வ கட்சிப்பிரதிநிதிகள் குழுவின் இறுதி அறிக்கையில் அடங்கியுள்ள விடயங்களின் சாராம்சங்களை மூன்று வாரங்களுக்கு முன்னர் (14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் பணியாளருக்கு இந்தியா செல்ல விசா மறுப்பு

(சென்னை)

இலங்கை அரசாங்கத்தை மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விமர்சிப்பவரும் அமெரிக்க மனி தாபிமானப் பணியாளருமான கலாநிதி எலைன் சந்தர் இந்தியாவிற்குச் செல்ல அமெரிக்காவிலுள்ள உயர்ஸ்தானிகரம் விசா வழங்க மறுத்துள்ளது.

புதுடில்லியில் நடைபெறவிருந்த கூட்டத்தில் அவர் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக செயலாளர் வைகோ சகிதம் பங்கேற்கவிருந்தார். (ச-5)

## வவுனியாவிலிருந்து வருவோரின் பொதிகள் யாழ். பஸ் நிலையத்தில் கொள்ளை!

### நேற்றிரவு மட்டும் 7 பேரின் பொதிகளைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

வவுனியாவிலிருந்து யாழ்.வரும் பயணிகளின் பொதிகள் யாழ்.பஸ் நிலையத்தில் வைத்து கொள்ளையிடப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவிலிருந்து மாலை 5 மணிக்கு பின்னர் புறப்படும் பஸ்கள் இரவு9 மணியளவில் யாழ்.நகரை வந்தடைகின்றன. இந் நிலையில் தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகள் அவசர அவசரமாக இறங்கு வதுடன் உறவினர்களின் உதவியுடன் தமது பொதிகளை பஸ்களிலிருந்தும் எடுக்கின்றனர்.

இதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் கொள்ளையர்கள் பஸ்ஸினுள் இருந்து பொதிகளை எடுத்துச் செல்வதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நேற்றிரவு மட்டும் சுமார் 7 பயணிகளின் பொதிகள் (14ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் சட்டத் திருத்தமூலம் அரசியல் அமைப்புக்கு முரணானது

### உயர் நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அரசியல் கட்சிகளின் பெயர்கள் இனம்மதம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருப்பதை தடைசெய்யும் தேர்தல் சட்டத்திருத்த மூலம் அரசியல் அமைப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளிப்பது தொடர்பில் தற்போது நடைமுறையில் இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தை திருத்தும் விதத்தில் அரசு சமர்ப்பித்திருக்கும் சட்டமூலம் அரசியல் அமைப்புக்கு முரணானது என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்திருப்பதாக சபாநாயகர் டபிள்யூ.ஏ.எம்லொக்கு பண்டார நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.


இந்த சட்டமூலத்தை சட்டமாக்குவதற்கு நாடாளு (14ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



வடக்கு மாகாண கல்வி அமைச்சும் மாகாணகல்வித் திணைக்களமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை நேற்று வலிகாமம் கல்வி வலயத்தில் நடைபெற்றது. இதில் வடக்குமாகாணக்கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா,மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் திருமதி செல்வின் இரேனியேஸ் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் வலி காமம் வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும் மேலுள்ளபடங்களிலும் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், ஆசிரியர் களின் குறைகளைக் கேட்டறிவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# கண்ணீர் அஞ்சலி



FLICT-GTZ அமைப்பின் முன்னாள் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் **சுதேசனா** அவர்களின் அன்புத் தந்தையார்,

**உயர்திரு. சுப்பிரமணியம் கோடீஸ்வரன்**

(ஓய்வுபெற்ற பிரதம தபாலதிபர் - யாழ்ப்பாணம்)

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரி
நிர்வாகம்.

# தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்கள் அமைச்சர் டக்ளஸ்டன் சந்தித்துப் பேச்சு

## நாளை சந்திக்கவும் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்காலிக இணைப்பிலுள்ள வெளிமாவட்ட ஆசிரியர்கள் நேற்றுக்காலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பின்போது 80ற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றும் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இச் சந்திப்பின்போது உரைநிகழ்த்திய அமைச்சர் தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு சாதகமான முடிவினைத் தெரிவிப்பதாக உறுதியளித்ததுடன் நாளை காலை சகல ஆசிரியர்களையும் தன்னைச் சந்திக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை தற்காலிக இணைப்பிலுள்ள சகல ஆசிரியர்களையும் நாளை காலை 8.30 மணிக்குஆரியகுளம்சந்தியிலுள்ளபுதியஉயர்கல்லூரியில் ஒன்று கூடு மாறு தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (ச)

# முகாம்களிலுள்ள மக்களுக்கு உதவ பெருமளவு உதவிகள் கிடைக்கப்பெற்றன

## அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக் கான அத்தியாவசிய உதவிகளை மேற்கொள்ளும் பொருட்டு தனியாரினால் 5 இலட்சத்து 97 ஆயிரத்து 665 ரூபா உதவிகள் மாவட்டச்செயலகத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில், எஸ்,கமலாகரன் (அமெரிக்கா), சிவஸ்ரீ.ச.தனீஸ்வரக்குருக்கள் (கோப்பாய்), திருமதி சாந்தினி இராமலிங்கம் (நவிண்டில்), திக்கம் சனசமூக நிலையம், பேராசிரியர் ஆ.சண்முகதாஸ் (திருநெல்வேலி),லயன்ஸ் கழகம்,அச்சுவேலி வட்டம்,யாழ்.ம்மாவட்ட செயலக நலன்புரிக்கழகம் ஆகியவற்றினுதவியுடன் இப்பணத்தொகை கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ் அன்பளிப்புகளுடன் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தினுடைய கப்பல் சேவைக்கட்டணத்தில் இருந்தும் 12 இலட்சத்து 12 ஆயிரத்து 250 ரூபா 54 சதம் வழங்கப்பட்டுள்ளது.நலன்புரி முகாம்களிலுள்ள மாணவர்கள் அனைவருக்கும் இலவச சீருடையினை வழங்குவதற்காக லங்கா சலுசல நிறுவனத்திடமிருந்து ரூபா 18 இலட்சத்து 9 ஆயிரத்து 915 ரூபா 54 சதத்திற்கு சீருடைகள் கொள்வனவு செய்து நலன்புரி முகாம்களில் உள்ள மாணவர்களுக்கு யாழ். மாவட்ட மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் ஊடாக விநியோகிக்கப்பட்டுள்ளது. நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள அனைத்து குடும்பங்களிற்கும் பிளாஸ்ரிக் கதிரைகள் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் 4ஆயிரம் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டு குறிப்பிட்ட நலன்புரி நிலையத்திற்குரிய பிரதேச செயலர்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தின் கப்பல் சேவைக் கட்டணத் திலிருந்து 23 இலட்சத்து 31ஆயிரத்து 246 ரூபா 50 சதம் வழங்கப்பட்டுள்ளதுயாழ். மாவட்ட இசைக்கலைஞர்களால் (நாதஸ்வரம்,தவில், வாய்ப்பாட்டு,வயலின், மிருதங்க,நடன இசைக் கலைஞர்கள்) வழங்கப்பட்டஅன்பளிப்பு ரூபா ஒருலட்சத்து 50ஆயிரமும்அவர்களுடைய கோரிக்கை யின் பிரகாரம் வவுனியா நலன் புரிநிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்குனவவுனியா அரச அதிபரூடாக அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. நிதி அன்பளிப்புக்களை வழங்கிய அனைவருக்கும் யாழ்ப் பாணமாவட்ட செயலகத்தின் சார்பில் எனது மனமுவந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என அரச அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

24 வது ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

**கலாலயா**

பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

**மகளிருக்கான துரித 3 மாதகால பயிற்சிகள்**

- **கேக் ஐசிங்,** Sugar Flowers, Fondant, மற்றும் ஏனைய ஐசிங்வகைகள்,
- **உணவு தயாரித்தல்** (கேக் வகைகள், பீஸா, Pastry, சிற்றுண்டிகள், ஈற்றுணவுகள்)
- **பப்றிக் வர்ணம் தீட்டுதல் :** துணிகளில், கண்ணாடியில், சேலையில் (Saree Painting)
- **கை வேலை :** கம்பளி நூல், Soft Toys, கழிவுத் துணிகளில் வேலைப்பாடுகள்.
- **பூ வேலை :** கடதாசி, துணி, Paper Ribbon, ஜெலற்றின், கபாயா மலர்கள் செய்தல்
- Saree Work : சேலையில் முத்துக்கள், சுயிக்கின்ஸ் கட்டுதல், Net Work செய்தல்
- **கூந்தல் அலங்காரம் :** 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், வெட்டுதல், சுருட்டுதல், நிறமூட்டுதல், Perming.

**மேற்படி பயிற்சிக்காலத்தின் நடுப்பகுதியில் Facials (முக அழகுக்கலைகள்) மணப்பெண் அலங்காரங்கள், சேலை உடுத்தும் முறைகள், கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல் (Manicure, Pedicure). ஆரம்பமாகும்.**

- தையல் அடிப்படை அறிவு அற்றவர்களுக்கான **6 மாதகால உடை தயாரித்தல் (தையற் கலை) பயிற்சிகள்** (அடிப்படைத்தையலுடன் குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான ஆடைகள், சாரிபிளவ்ஸ் தைத்தல்)

➡ பயிற்சிகள் முடிந்தபின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தையல் தெரிந்தவர்களுக்கான **இருவாரகால** சாறி பிளவுஸ், சுரிதார், கவுண், சட்டை, Skirts தைத்தல்.

➡ மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.

**கிழமை நாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 16-09-2009**
**சனி, ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 20-09-2009** } காலை 9.00 மணி

*மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.*

**தொடர்பு கொள்ளவும்**

அநாதரவாகத் திரிந்த பசு மாடு ஒன்று கடந்த 5-ம் திகதி பிடிக்கப்பட்டு தாவடி தெற்கு J/192 கிராம சேவகரினால் தாவடி விவசாய சம்மேளனத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
தாவடி விவசாய சம்மேளனம்
(3516)

**விற்பனைக்கு**

கொங்கிறீற் கல் தயாரிக்கும் இயந்திரம்-2, வேலித்தூண் அச்சுகள், கொட்டகைத்தூண் அச்சுகள்விற்பனைக்குஉண்டு.

தொடர்பிற்கு: 0774002263
(3502)

**தவறிவிட்டது**

கொக்குவில் கிழக்கு,கொக்குவில் யாழ்ப்பாணம் எனும் விலாசத்தையுடைய சோதிநாதன்சிவகுமார்(751474105) என்பவரது ஆட்டோவுக்கான பதிவு மூலப்பிரதி (இல. 201-7325) நல்லூர் பிரதேச செயலகத்திற்கும் கந்தர்மடம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும்விலாசத்துடன்தொடர்புகொள்ளவும்.

திவ்யா ஸ்ரோர்ஸ்
200,பலாலி வீதி,கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P.:-0212228340
(3515)

**K.T.M.எண்ணெய் மில்**

கொப்பறா,இலுப்பை,வேம்பு, எள்ளு,சூரியகாந்தி என்பன எண்ணெயாக ஊற்றி பெற்றுக் கொள்ளவும். கருவாட்டு உப்பு தொகையாக அரைத்து பெற்றுக் கொள்ளவும் நாடுங்கள்.

K.T.M. எண்ணெய் மில்
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.
(C-3301)



யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கைதடியில் உள்ள தொழில்நுட்ப பூங்கா மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விழிப்புலனற்றோர் சங்கத்தலைவர் ஆ. மகேந்திரன் தலைமையுரை ஆற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மட்டுவில் மகா வித்தியாலய அதிபர் மு. பாலசுப்பிரமணியம் உரையாற்றுவதையும், சங்க அங்கத்தவர் ஒருவரின் பிள்ளைக்கு கைதடி சாந்தி இல்லத்தின் உதவி அத்தியட்சகர் மூக்குக் கண்ணாடி வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: சாந்தன்)

## வடமாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால்

## யாழ்.மாநகர சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் யாழ். மாநகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள், நூலகங்கள், மகப்பேறு நிலையங்கள் மற்றும் மலசல கூட பராமரிப்பு ஆகியவற்றுக்காக 5 இலட்சத்து 35 ஆயிரத்து 190 ரூபா மூலதன நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில் தரம் 'அ' மற்றும் 'ஆ' பிரிவிலுள்ள ஒவ்வொரு சனசமூக நிலையங்களுக்கும் முறையே 5 ஆயிரம், ரூபா 4 ஆயிரத்து 200 ரூபா வீதம் 66 சனசமூக நிலையங்களுக்கும் 2 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாவும், பொதுநூலகம் ஒன்றிற்கு 60 ஆயிரமும், மகப்பேறு சிறுவர் நலன்புரி நிலையத்தின் 11 நிலையங்களுக்கு ஒரு இலட்சத்து 32 ஆயிரமும் மற்றும் மலசல கூடப் பராமரிப்பிற்கு ஒரு நிலையத்திற்கு 3 ஆயிரத்து 331 வும் மூலதன நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டுக்கான இவ் வேலைத் திட்டத்தை மிக விரைவில் ஆரம்பிக்குமாறு வடமாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் யாழ். மாநகர சபைக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-30)

## யாழ்ப்பாணத்திலும் திருமலையிலும் விரைவில் கடவுச்சீட்டு அலுவலகம்

(கொழும்பு)

இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கிளைகள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அடுத்த வருட தொடக்கத்தில் தொடங்க உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் கிளை அலுவலகங்களைத் திறப்பது என்று கொள்கை ரீதியாக முடிபு செய்துள்ளோம் என குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் பி.பி. அபயக்கோன் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மக்கள் கடவுச் சீட்டுக்களை விரைவாகவும் இலகுவாகவும் பெற்றுக் கொள்ளும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. தற்போது தமது கடவுச் சீட்டுகளைப் பெற்றுக் கொள்வதற்காக அப்பகுதி மக்கள் கொழும்புக்கு வரவேண்டி உள்ளதால் இந்த நடவடிக்கைக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது கண்டி, மாத்தறை, அனுராதபுரம் ஆகிய இடங்களில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கிளை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

திணைக்களத்தில் மொத்தம் 900 பேர் பணியாற்றி வருகின்றனர். அவர்களில் சுமார் 50 வீதியின் கிளை அலுவலகங்களில் பணியாற்றுகின்றனர். (ச-5)

## யாழ். பிரதேச செயலக வளாகத்தில்

## சமூக பராமரிப்பு சிறுவர் பாதுகாப்பு நிலையம் புதிதாக நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சமூக நலத்துறை திணைக்களத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் யாழ். பிரதேச செயலக வளாகத்தில் சமூக பராமரிப்பு சிறுவர் பாதுகாப்பு நிலையம் ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

மாற்று ஆற்றலுடையோர், முதியவர்கள் ஆகியோர் தங்கள் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கென அமைக்கப்பட்டு வரும் சமூக சேவைப்பிரிவு, சிறுவர் நன்னடத்தை பிரிவு ஆகிய இரு நிலையங்களும் 540 சதுர அடி நிலப்பரப்பில் புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இவ் வேலைத்திட்டத்திற்கென வடமாகாண சமூக நலத்துறை திணைக்களத்தினால் 1.89 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்பதாக இப் பணிகள் பூர்த்தியடையும் எனவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (6-30)

## சிறுவர் மற்றும் இளைஞர் தொடர்பான கட்டளைச் சட்டத்தில் மாற்றம்

(கொழும்பு)

சிறுவர் மற்றும் இளைஞர் தொடர்பான கட்டளைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது. இதற்கான சட்ட மூலத்தை இயற்றும் பணிகள் அடுத்த மாதத்திற்குள் பூர்த்தி செய்யப்படவுள்ளதாக சிறுவர் நன்நடத்தை மற்றும் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக மக்களின் கருத்துக்களை கேட்டறிவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபே குணவர்த்தன குறிப்பிட்டார்.

சிறுவர் உரிமைகளை பாதுகாப்பது மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது ஆகியவற்றை நோக்காகக் கொண்டே குறிப்பிட்ட சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இதன் பிரகாரம் சிறுவர் மற்றும் இளைஞர் தொடர்பான கட்டளைச் சட்டத்தில் நீண்டகால திட்ட அடிப்படையில் திருத்தங்களை செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்பு திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார். (6-9)

## கல்வித் துறையினரின் நடமாடும் சேவை

(சாவகச்சேரி)

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் வடமாகண கல்வித்துறையினரின் நடமாடும் சேவை நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் தென்மராட்சி வலய அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-4-29)

## பாலஸ்தாபனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடக்கு இலுவம்பிள்ளையார் ஆலய பாலஸ்தாபனம் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் இன்று பிற்பகல் ஆரம்பக் கிரியைகள் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர் (ஓ-29)

## அமைச்சருடனான விசேட சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக கடந்த ஒரு மாதகாலமாக பகிஷ்கரிப்பில் ஈடுபடும் மாணவர்களின் கோரிக்கைகளை நேரில் ஆராய்ந்து கலந்துரையாடுவதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.


எனவே மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது. (6-7)

## பொதுமக்களின் உதவியுடன் வாய்க்கால் புனரமைப்பு


(கல்வயல்)

உலக உணவு திட்டத்தின் கீழ் கல்வயல் விளைவேலி மேற்கு பக்க வாய்க்கால் பகுதியில் சுமார் 1 கிலோமீற்றர் தூரமுள்ள வாய்க்கால் பகுதி பொதுமக்களின் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்டு வருவதாக கல்வயல் விவசாய சம்மேளன செயலாளர் தெரிவித்துள்ளார். (4-31)







வெற்றி நமதே திரைப்பட ஆரம்ப விழா நேற்று அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பட இயக்குநர் மாணிக்கம் உரையாற்றுவதையும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திரைப்பட விழாவை ஆரம்பித்து வைப்பதையும், விருந்தினர்கள் அரங்கில் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.(படங்கள்:-அலுவலக செய்தியாளர்)

# காரை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்திக்கு நிதிஒதுக்கீடு

(காரைநகர்)

பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தினூடாகவும் கமநெகும திட்டத்தினூடாகவும் காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் வரவு செலவுத்திட்ட நிதியினூடாக காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்திற்கு கணனி மற்றும் அதற்குரிய தளபாடக் கௌள்வனவிற்கு 75 ஆயிரம் ரூபாவும் வலந்தலை வடக்கு அமெரிக்கன் தமிழ்க் கலவன் பாடசாலை விளையாட்டு மைதான அபிவிருத்திக்கு 50 ஆயிரம் ரூபாவும் காரை -மத்தி மேம்பாட்டுக் கழகத்திற்கு கணனி மற்றும் அதற்குரிய தளபாடக்கொள்வனவிற்கு 75 ஆயிரம் ரூபாவும் பெரிய மணல் கிராம அபிவிருத்திச் சங்க நூலக அபிவிருத்திக்கு 25ஆயிரம் ரூபாவும் காரைநகர் கிழக்கு உளரி மற்றும் பிட்டியெல்லை கிராமிய மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் தையல் இயந்திரங்கள் கொள்வனவிற்கு தலா 25 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் கமநெகும திட்டத்தின் கீழ் கடந்த நிஷா புயல் வெள்ளப் பெருக்கினால் பாதிப்படைந்த கடற்றொழிலாளர்களுக்கு தொழில் உபகரணக் கொள்வனவுக்கு 331 இலட்சம் ரூபா, காரை கிழக்கு கிராம சேவகர் பிரிவு விவசாய அபிவிருத்திக்கு 70 ஆயிரம் ரூபாவும் காரை வடக்கு கிராம சேவகர் பிரிவு விவசாய அபிவிருத்திக்கு 30 ஆயிரம் ரூபாவும் காரை தென்மேற்கு, காரைவடக்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் மரம் நடுகைத் திட்டத்திற்கு 40 ஆயிரம் ரூபாவும் காரைநகர் மேற்கு கிராமசேவையாளர் பிரிவில் பழமரச் செய்கையை ஊக்குவிப்பதற்கு 1 இலட்சம் ரூபாவும் காரைநகர் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் மர நடுகைத்திட்டங்களை மேம்படுத்துவதற்கு 20 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (6-4-246)

# புதிய உயர்கல்வி ஒருங்கமைப்பு அலுவலக திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

IIS City Campus நிறுவனம் ICBT நிறுவனத்துடன் இணைந்து குடாநாட்டில் உயர்கல்விச் சேவையை ஒருங் கிணைக்கும் நோக்குடன் IBCT-IIS Jaffna Campus என் னும் புதிய உயர்கல்வி ஒருங்கமைப்பு அலுவலகத்தினை எதிர் வரும் 16ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு 209 மானிப்பாய் வீதியில் ஆரம் பிக்கவுள்ளது.

IIS நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதி காரி கே. விக் னேஸ் தலை மையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் ICBT Campus நிறுவனத் தின் நிறைவேற்று அதிகாரி மோகன் பத்திறன இவ் அலுவல கத்தினை திறந்து வைக்கவுள்ளார்.

அத்துடன் இந் நிறுவனத்தின் மூலம் குடாநாட்டு மாண வர் கள் தங்கள் உயர்கல்விக்குMiddlesex, Sunderland Manipal பல்கலைக்கழகங்களின் கற்கை நெறிகளினை யாழ்ப்பாணத்திலோ அல்லது கொழும்பிலோ அல்லது வெளி நாட்டிலோ தொடர்வதற்கு தேவையான ஒழுங்குகள் அனைத் தும் இவ் அலுவலகத் தினூடாக மேற்கொள்ளப்படும் என IIS நிறுவன இயக்குநர் தெரிவித்துள்ளார். (6-4)

# நெற்செய்கைக்கான கடன் வழங்கல்

(கல்வயல்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கல்வயல் விவசாய சம்மேளன உறுப்பினர்கள் 61 பேருக்கு நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு நெற்செய்கைக் கான கடன் வழங்கப்படவுள்ளது.

சாவகச்சேரி பெரும்பாக உத்தியோகத்தர் கு. ஜெகதீஸ் வரியின் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் எஸ். சந்திரகுமார் கலந்து கொண்டு இக் கடன்களை வழங்கவுள்ளார். (6-31)

# தளபாடங்கள் அன்பளிப்பு

(சாவகச்சேரி)

இராமாவில் இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலைய பாடசா லைகளின் பாவனைக்காக கரித்தாஸ் கியுடெக் நிறுவனத் தினால் ரூபா 10 இலட்சம் பெறுமதியான தளபாடங்கள் கையளிக்கப்பட்டுள்ளது. (6-29)

# சமூக விழிப்புணர்வு செயற்திட்டம்

சொண்ட் நிறுவனத்தினால் காலநிலை மாற்றம் தொடர்பான சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் பிரதேசத்தில் நடத்தப்படவுள்ளது.

இச் செயற்திட்டத்தின் மூலம் இப்பிரதேச மக்களுக்கு காலநிலை மாற்றம், அனர்த்தம் தொடர்பாக துண்டுப்பிரசுரங்கள் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் மூலம் அனர்த்த அபாயக் குறைப்பினை மேற்கொள்வதே நோக்கமாகும் என நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (6-4-30)

# கௌரவிப்பு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார்ஆச்சிரமத்தில் கடந்த 4 வருடங்களிற்கும் மேலாக கம்பராமாயணம் என்னும் விடயம் பற்றி சொற்பொழிவாற்றிய சைவப்புலவர் பொன். சுகந்தனை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் நா. சண்முகலிங்கன் இன்று ஞாயிற்றுக்கிழமை பொன்னாடை போர்த்தி கௌரவிக்கவுள்ளார்.

அத்துடன் இன்றைய தினம் மகாபாரதம் என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் பொன்.சுகந்தன் சொற்பொழிவாற்றவுள்ளார். (6-4-35)

# இரத்ததான முகாம்

வேல்ட் ரீம் (World Team) கழகத்தினால் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3மணி தொடக்கம் மாலை 6 மணி வரை சித்தன் கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய மண்டபத்தில் இரத்ததான முகாம் நடத்தப்படவுள்ளது. இரத்ததானம் வழங்க விரும்புப்வர்கள் இன்றைய தினம் வருகை தந்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு கழகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (6-4-30)


**Affiliated with JOBSNET**
**Ministry of Labour Relation and Manpower**

18 வருட அனுபவம்

தபால் மூலம்

ஆறுமாத கால டிப்ளோமா
Course Length-Six Month
Sep 2009 to Feb 2010

1.Dip.in psychology (உளவியல் டிப்ளோமா)
2.Dip.in Office Administration (காரியாலய நிர்வாக டிப்ளோமா)
3.Dip.in Civil Engineering (சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா)
4.Dip.in Nursing Administration (தாதியர் நிர்வாக டிப்ளோமா)
5.Dip.in Human Resources Management (மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா)
6.Dip.in Montessori (மொண்டிசூரி டிப்ளோமா)
7.Dip.in Business Management (வியாபார முகாமைத்துவ டிப்ளோமா)
8.Dip.in Health & Hospital Management (சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா)
9.Dip.in Banking Management (வங்கி முகாமைத்துவ டிப்ளோமா)
10.Dip.in Research & Development (ஆய்வு மற்றும் அபிவிருத்தி டிப்ளோமா)
11.Dip.in Sales & Marketing Management (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா)
12.Dip.in Educational Management (கல்வி முகாமைத்துவ டிப்ளோமா)

பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன் மற்றும் நுவரேலியா

மேலதிக விபரங்களைப் பெற உங்களது பெயர்.,முகவரி,தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile:0777 140 844/ 071 803 4848

யாழ்ப்பாண முகவர்
S.N.Piratheepan
077-6702505

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR.A.HASSEN
(B.Sc.Psychology,M.Sc.Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24,1st Floor, Supermarket complex,Main Street,Sainthamaruthu-07.
Web: www.aiimas.com,www.iimat.com,www.aicomas.org
Tel: 067 2222917, 060 2671749,060 2679688,071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி: 28.09.2009

(3509)



**ஐங்கரன் திருமண சேவை**

**மணமகள் தேவை**

எங்களிடம் யாழ். இந்து உயர்குலம் U.K Citizen 30, 34, 37,39 வயது, Canada Citizen32, 35, 36 வயது, Holand Citizen 36 வயது America (Green Card) 36 வயது, GermanCitizen 38 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை. *தொடர்பு :- லண்டன் ஐங்கரன்*
T.P No.-0044-7535384166 -0044 - 7508295863
Fax No-0044-2086810701 -0044 -2086720673
(3503)

**மணமகன் தேவை**

எங்களிடம் யாழ். இந்து உயர்குலம் U.K Citizen 25,28, 33,36வயது, Canada Citizen 34,31 வயது, Austerliya Citizen 37 வயது, Swiss Citizen 26 வயது, France Citizen 25 வயது ஆகிய மணமகள்மார் உள்ளனர். தகுந்த மணமகன்மாரை எதிர்பார்க்கின்றனர். 24மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை. *தொடர்பு :-லண்டன் ஐங்கரன்*
T.P No.-0044-7535384166 -0044 - 7508295863
Fax No-0044-2086810701 -0044 -2086720673
(3503)



**யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**

**எழுதுநர்கள் தேவை**

கல்வித் தகைமைகள்:-க.பொ. (சா/தரம்) அல்லது அதற்கு சமமான பரீட்சையிலும் க.பொ.த (உ/தரம்) கணக்கியல் துறையிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணக்கியல் கணனித் துறைகளில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் சுயமாக செயலாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

அனுபவம் :-குறிப்பிட்ட பதவியில் ஆகக்குறைந்தது 03 வருட முன்னனுபவம் இருத்தல் வேண்டும்.

வயது :-25 வயதுக்கு குறையாமலும் 50 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் )

சம்பளம் :- பேசித் தீர்மானிக்கப்படும்.

இத் தகைமைகளுடன் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற இருவரின் சிபார்சுக் கடிதத்துடன் 16.09.2009 புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது சங்கத்திற்கு வருகை தரவும்.

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,
559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்

(C-2650)

# சனிப்பெயர்ச்சி 26.09.2009 முதல் 14.11.2011 வரை உங்களுக்கு எப்படி?

## சிங்கம்



(மகரம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம் வரை)

**குடும்ப ஸ்தான சனியாலே கூடுதல் இலாபம் இனிமேலே!**

கம்பீரமான தோற்றதால் காரியங்களைச் சாதித்துக்கொள்ளும் சிங்க ராசி நேயர்களே!

ஏழரைச் சனியில் ஐந்தாண்டுகள் முடிந்து விட்டன. இனி குடும்பச் சனி இரண்டரை ஆண்டுகளும் குதூகலத்தை வரவழைத்துக் கொடுக்கப்போகிறது. முதல் ஆளாக இருந்து முன்னேற்றம் காண என்ன வழி என்பதைப் பற்றி யோசிப்பீர்க்ள.

உங்கள் ராசிக்கு அதிபதியான சூரியன் ராஜகிரகம் என்பதால் ராஜ யோகமான வாழ்க்கை அமையும் பக்க பலமாக இருப்பவர்கள் அத்தனை பேரையும் அனுசரித்து வைத்திருப்பீர்கள் உங்கள் ஜாதகத்தை ஆராய்ந்து சூரியன் இருக்கும் சாரபலமறிந்து அதற்குரிய பரிகாரங்களைச் செய்து கொண்டால் எந்த நாளும் இனிய நாளாக மாறும்.

நவாம்சத்தில் சூரியன் இருக்கும் நிலை அறிந்து அதைப் பார்க்கும் கிரகம் அதோடு இணைந்த கிரகம் ஆகியவற்றை ஆராய்ந்து அவைகளுக்கு ஏற்ற விதத்தில் வரும் எண்களின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் உங்கள் தொழில் நிலையத்தின் பெயரையும் அமைத்துக்கொண்டால் எதிர்காலம் இனிமையானதாக அமையும்.

ஸ்திர ராசியாக உங்கள் ராசி விளங்குவதால் உங்கள் குடும்பத்தில் இதே ராசியைச் சார்ந்த வேறொரு நபர் இருந்தால் உடனடியாக அதற்குரிய பலிகாரங்களைச் செய்வது நல்லது. அப்பொழுது தான் குடும்ப முன்னேற்றம் கூடும் அதே போல சப்தமாதிகதியாகச் சனி விளங்குவதால் திருமண வாழ்க்கையும் தித்திப்பாக அமைய பொருத்தம் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்குச் சனிப்பெயர்ச்சி சாதகமான பெயர்ச்சி தானா என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**ஜென்மச் சனி விலகியது ! சிக்கல்கள் எல்லாம் ஓய்ந்தது!**

உங்களுக்கு வரும் சனிப்பெயர்ச்சி குடும்பச்சனியாக வருகிறது. ஏழைரைச் சனி முதல் இரண்டாரை ஆண்டுகள் விரயச் சனியாகி நடைபெற்றது. அடுத்த இரண்டரை ஆண்டுகள் ஜென்மச் சனியாக நடை பெற்றது. இப்பொழுது குடும்பச் சனி என்றழைக்கப்படும் விதத்திதல் 2ஆம் இடத்தில் சனி சஞ்சரிக்கப் போகிறார். குடும்பத்தில் ஏற்படும் குழப்பங்களைத் தீர்த்து வைத்து கொள்கைப் பிடிப்போடு செயல்படும் அமைப்பையும் உரு வாக்க வேண்டியது இந்த சனியின் கடமையாகும்.

சனி உங்கள் ராசிக்கு 6, 7க்கு அதிபதியாகிறார். புரட்டாதி மாதம் 10ஆம் திகதி முதல் 2இல் சஞ்சரிக்கும் சனி அங்கிருந்து கொண்டு 4, 8, 11 ஆகிய இடங்களைப் பார்த்து புனிதப்படுத்தப் போகிறார். எனவே திடீர் இட மாற்றங்கள் தித்திக்க வைக்கலாம் .வீடு வாங்கும் யோகம் தேடி வரும்.

குடும்ப உறுப்பினர்களின் ஆசைகளைப் பூர்த்தி செய்வீர்கள் சித்தப்பா பெரியப்பா என்று உங்களைச் சார்ந்தவர்களெனல்லாம் உயர்வ



தற்கு வழி வகுத்துக்கொடுப்பீர்க்கள் யோகா திபதியாகவும் சனி விளங்குவதால் தேக நலனின் அதிக அக் கறை எடுத்துக் கொள்ள வேண்டிய நேரமிது.

**இரண்டாம் இடத்துச் சனி இனிமை தருமா?**

சனி உங்கள் ராசிக்கு ரண ரோக ஸ்தானத்திற்கும் களத்திர ஸ்தானத்திற்கும் அதிபதியாவர். உங்கள் ராசிநாதன் சூரியனுக்குப் பகைவனாகவும் விளங்குகிறார். இரண்டில் சனி வந்தால் திரண்ட நிதி வரும் என்று சொல்லுவர் எனவே எதை நினைத்தீர்களோ அதை நினைத்த மாத்திரத்தில் செய்ய இயலும்.

குடும்பத்தில் கொடி கட்டிப் பறந்த பிரச்சினைகள் படிப்படியாக மாறும் கணவன் மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும்.

நிதிப் பற்றாக்குறை இனி ஏற்படாது . நீங்கள் செய்யும் செயலுக்கு ஏற்ற தொகை தேவையான நேரத்தில் வந்து சேரும் உத்யோகத்தில் உள்ளவர்களுக்கு உதிரி வருமானம் பெருகும் . விருப்ப ஓய்வில் வெளியே வந்து தொழில் செய்ய முற்படுவர்.

**பார்க்கும் சனியால் ஏற்படும் மாற்றங்கள்!**

உங்கள் ராசிக்கு 4ஆம் இடத்தையும் 8ஆம் இடத்தையும் 11ஆம் இடத்தையும் சனி பார்க்கப்போகிறார். சனி நிற்கும் இடம் தன ஸ்தானம் என்பதை நினைவில் கொள்ளளுங்கள் பணக்காராரின் பார்வை உங்கள் மீது பதிந்தால் உதவிக்கரம் நீட்டுவார்கள். அல்லவா அதைப்போல தன ஸ்தானத்தில் இருக்கும் சனியின் பார்வை உங்கள் மீது பதியும் போது பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும்.

சுக ஸ்தானத்தில் சனியின் பார்வை பதிவதால் ஒரு சில சமயங்களில் காய்ச்சல், தும்மல், கால், கை, இடுப்பு வலி போன்றவைகள் அலைச்சல் காரணமாக உருவாகலாம். தாயின் உடல் நலத்தில் திடீர் பாதிப்புகள் ஏற்படலாம். சுய ஜாதகம் வலுவாக இருந்தால் கவலைப் படத்தேவையில்லை.

எட்டாமிடத்தைப் பார்க்கும் சனியால் இழப்புக்களை ஈடு செய்ய ஒரு வழி பிறக்கும். சேமிப்புக்கள் கரைந்ததே என்று கவலைப்பட்ட உங்களுக்கு இனி அவைகளை ஈடுகட்டும் விதத்தில் வாய்ப்புகள் வந்து சேரும் . வழக்குகள் நல்ல முடிவிற்கு வரும் கொடுக்கல் வாங்கல்களில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. வியாபாரத்தில் விசுவாசமுள்ள ஊழியர்கள் விலகிச் செல்லலாம். 6க்கும் அதிபதியாக சனி விளங்குவதால் அடுத்த பணியளாள்கள் உங்களுக்கு உடனே கிடைப்பார்.

வாகனப் பழுதுகள் அதிகரிக்கும். இந்த நேரத்தில் புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள் வாகன எண் உங்களுக்கு யோகம் தரும் எண் தானா? என்பதை ஆராய்ந்து வாங்குவது நல்லது. இருந்தாலும் அஷ்டம ஸ்தானத்தை சனி பார்ப்பதால் வாகனங்களில் எப்பொழுது சென்றாலும் மிகக் கவனமாக இருப்பதே நல்லது.

லாப ஸ்தானத்தை சனி பார்ப்பதால் மூடிக் கிடந்த தொழிலை மீண்டும் திறப்பு விழா நடத்தி மகிழ்வீர்கள் தூரதேச பயணங்களை மேற்கொள்ள விரும்புபவர்கள் ஹோரையைப் பார்த்து புறப்பட்டுச் சென்றால் உயர்ந்த நிலையை அடையலாம்.

யோக பலம் பெற்ற நட்சத்திரமும் திங்கட்கிமையும் இணையும் நாளில் தெசா புத்திக் கேற்ற தெய் வழிபாடுகளை திருப்தியாக தேர்ந்தெடுத்துச் செய்தால் வெற்றி மீது வெற்றியைக் குவிக்கலாம்.

**ராகு -கேது பெயர்ச்சி காலம்!**

27.10.2009 இல் தனுசு ராசியில் ராகுவும் மிதுன ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள் கோதண்டராகு உங்கள் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக எடுத்த முயற்சிகளை வெற்றி பெறச் செய்வார். உயர் பதவிகளையும் மற்றும் அரசியலில் புதிய பொறுப்புகளையும் உங்கள் வாரிசுகள் பெறுவர். அதைக் கண்டு நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள். பூர்வீக சொத்துக்களால் மிகப் பெரிய இலாபம் கிட்டும்.

கேது பலத்தால் புதிய ஒப்பந்தங்களில் ஒன்றிரண்டு கை நழுவிப் போகலாம். இருப்பினும் புதிய கூட்டாளிகள் வந்திணைந்து தொழில் வளர்ச்சிக்கு ஆதரவு கொடுப்பர். மாற்றினத்தவர்களால் நன்மை கிடைக்கும் நேரமிது.

ராகு கேதுக்கள் நல்ல வாய்ப்புக்களை வீடு தேடி வரவழைக்கப் சர்ப்ப சாந்திகளை முறையாக ஸ்தலங்களுக்குச் சென்று செய்து வருவது நல்லது.

**குருப்பெயர்ச்சிக் காலம்!**

கன்னி ராசியில் சஞ்சரிக்கும் பொழுது குரு கும்பராசியில் பெயர்ச்சியாகிறார். அந்த இனிய நாள் 15.12.2009 கும்பத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் வியாழ நோக்கம் வீடு தேடி வருகிறது. இதுவரை எண்ணற்ற வரன்கள் பார்த்து எதுவும் முடிவடையவில்லையே என்று அங்கலாய்த்தவர்கள் இப்பொழுது மகிழச்சி கடலில் மிதக்கப்போகிறார்கள் மங்கல ஓசை இல்லத்தில் கேட்கும் தங்கு தடைகள் தானே அகலும்.

மீன ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அஷ்டமத்துக் குருவின் ஆதிக்கம் மேலோங்குகிறது. எனவே விரயங்கள் கூடும். வீடு மாற்றங்கள் ஏற்படும் நாடு மாற்றம் செய்தவர்கள் மீண்டும் பழைய இடத்திற்கே வந்து சேருவர். பிள்ளைகள் வழியில் பெரும் செலவு ஒன்று ஏற்படலாம். நல்ல வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேர திசை மாறிய தென்முகக் கடவுளை வழிபட்டு வாருங்கள்.

சனியின் வக்ர காலம் பொற்காலமாக மாற 14.01.2010 முதல் 31.05.2010 வரை மீண்டும் 27.01.2011 முதல் 13.06.2011 வரை சனி வக்ர இயக்கத்திலிருந்து செயல்படுகிறார்.

இந்த நேரத்தில் பணத்தேவைகள் பூர்த்தியாகும் கடன் சுமைகள் குறையும் ஆறுக்கு

**ஜோதிடக் கலைமாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

அதிபதி வக்ரம் பெறும் பொழுது எதிரிகள் விலகுவர். தொழில் உத்யோத்தில் திடீர் மாற்றங்களைக் காண்பீர்கள். வரும் மாற்றம்வளர்ச்சி' தரும் மாற்றம் தான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அதே நேரத்தில் ஏழாமிடத்திற்குப் சனி அதிபதியவதால் குடும்பத்தில் பிரச்சினைகள் அதிகரிகம் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமலிருக்க அனைவரையும் அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. சனிக்கிழமை தோறும் விரத மிருந்து விநாயகப் பெருமானுக்கு மாலை சூட்டி வழிபாட்டு வாருங்கள். கட்டாயம் உங்கள் கனவுகள் நனவாகும்.

**சிறப்பு வழிபாடு**

கன்னிச் சனியால் காரியங்களில் வெற்றி பெற வழிபாடு

ஏழரைச் சனியின் ஆதிக்கம் விலகும். சமயத்தில் விரும்பிய வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும். எனவே வார வழிபாடாக ஞாயிற்றுக்கிழமை தோறும் அருகிலுள்ள சிவாலயத்திற்குச் சென்று உமா மகேஸ்வரர், நந்திதேவர் ஆகியோரை வழிப்ட்டு வாருங்கள்.

**தும்பிக்கை கொண்டவனே! தூதாகச் சென்றவனே!**

**நம்பிக்கை கொண்டு நானுன்னைத் தொழுகின்றேன்!**

**அம்புவியில் எனக்குவரும் அன்றாடப் பிரச்சினையை!**

**இன்பமுடன் தீர்த்துவைக்க எழுந்துவா கற்பகமே!**

**என்று பாடினால் நம்பிக்கை அனைத்தும் நிறைவேறும்!**


(தொடரும்)




யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெற்ற மாற்று வலுவுள்ளோர் தின விழாவில் மாற்று வலுவுள்ளோருக்கு அன்பளிப்பு வழங்கப்படுவதையும், வாழ்வக சிறுமிகளின் நடன நிகழ்ச்சி மற்றும் வாழ்வக சிறுவனின் இசை நிகழ்ச்சியையும் படங்களில் காணலாம்.

# விடிவை நோக்

## மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் வ



**இலங்கையில் மாத்திரமின்றி உலகெங்கிலும் பல்லாயிரக் கணக்கானோர் மூளை வளர்ச்சிக்குன்றிய நிலையில் வாழ்கின்றனர். இது விதியா அல்லது சதியா? இவ்வாறான குழந்தைகள் எவருக்கும் பிறந்து விட்டால் உடனே பெற்றோர்கள் செய்த பாவம் என்பார்கள்.**

அதே போல் விதிமேல் பழி போடும் சமூகம் மருத்துவத்துறையையும் குற்றம் காணும், நம் நாட்டில் இவ்வாறான குழந்தைகள் ஏராளமாக காணப்படுகின்றனர். இவர்கள் சரியான முறையில் பராமரிக்கப் படுகிறார்களா? வளர்க்கப்படுகிறார்களா? என்றால் அது கேள்விக்குறியே. வசதி படைத்தோர் பெரும்பாலான பணம் செலவு செய்து தமது குழந்தைகளை இதற்காகவே நிறுவப்பட்டிருக்கும் உயர் மட்ட இடங்களில் படிக்கவைக்கின்றனர். வசதி அற்றோர் இலவச இல்லங்களில் ஒப்படைக்கின்றனர்.

இவ்வாறானவர்களுக்காக நாடளாவிய ரீதியில் பல கிளைகள் இயங்கிவருகின்ற போதிலும் போதிய பண உதவி இன்றியே அவ்வில்லங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றனர். அவ்வாறான இரண்டு இடங்களுக்கு நாம் சென்று பார்வையிட்டதுடன் பராமரிப்பாளர்களையும் சந்தித்தோம். வசதி அற்றோர் தமது குழந்தைகளை வத்தளை – ஹெந்தளையில் அமைந்துள்ள பிரீத்திரபுர எனும் இல்லத்தில் ஒப்படைக்கின்றனர்.

இவ் இல்லம் அமைதியான சூழ்நிலை யில் உள்ள போதிலும் சிறியோர் முதல் பெரியோர் வரை பராமரிக்கப்படுகின்றனர். இவ் இல்லத்தினை பற்றிய விளக்கத்தினை எமக்களித்தார். இவ்வில்லத்தின் செயலாளர் திருமதி புஷ்பா.

எமது இவ்வில்லம் நாடளாவிய ரீதியில் செயல்பட்டு வருகிறது. மாவன்னலையில் இரண்டு கிளைகளும், நீர்கொழும்பில் ஒன்றும், காலியில் ஒன்றும் செயல்படுகின்றது. வத்தளை ஹெந்தளையில் நீங்கள் பார்க்கும் இவ்வில்லம் தான் தலைமையகம். இது 1964 ஆம் ஆண்டு ஆரம்பிக்[illegible] அப்போது 2 பிள்ளைகள் மாத்திரமே இருந்த[illegible]னர். இப்போது 86 [illegible]ழந்[illegible]தைகள் இருக்கிறார்கள். பிறவியிலேயே தமது குழந்தைகள் இவ்வாறானவர்கள் என்று இனம் காணப்பட்ட நிலையிலேயே பெற்றோர்கள் இவ் குழந்தைகளை மேற்படி இவ் இல்லங்களில் விட்டுச்செல்வதாகவும் மற்றும் பிறந்த உடனேயே மருத்துமனைகளிலும் விட்டுச் செல்லப்படும் குழந்தைகளும் இங்கு உள்ளனர் என அவர் தெரிவித்தார்.


அத்தோடு பெரும்பாலான பெற்றோர்கள் இங்கு குழந்தைகளை விட்டுச் செல்வதற்கு காரணம் தமது வறுமை, சமூகத்திற்கு முகம் கொடுக்க முடியாத நிலையே. சில பெற்றோர்கள் தமது குழந்தைகளை ஒப்படைப்பதோடு அவர்களை வந்து பார்ப்பதோ உதவிகள் வழங்குவதோ கிடையாது. ஒரு சில பெற்றோர்கள் ஏதேனும் விசேட நாட்களில் வந்து பிள்ளைகளை பார்ப்பார்கள். பெரும்பாலும் கொடை வள்ளர்களாலும் சில சமூக வேசவையாளர்களினாலுமே எமக்கு உதவிகள் வழங்கப்படுகின்றது. இவர்கள் வழங்கும் நன்கொடைகளை வைத்தே குழந் தைகளின் தேவைகளை பூர்த்தி செய்கின்றோம். இக்குழந்தைகளை பராமரிப்பதற்காக 20 ஊழியர்கள் மாத்திரமே இங்கு இருக்கிறார்கள். இவர்களுக்கு மிக சிறிய தொகையினையே கொடுப்பனவாக கொடுக்கின்றோம். இங்கு குழந்தைகளாக வந்தவர்கள் சிலர் படிப்படியாக குணமடைந்து வெளியேறியவர்களும் இருக்கிறார்கள். இங்கேயே தமது காலத்தை கழிக்க விரும்புபவர்களும் இருக்கிறார்கள். மாதாமாதம் இவர்களுக்கான மருத்துவ சிகிச்சையினை ஒரு மருத்துவர் இலவசமாக வழங்கி வருகிறார் என்றார்.

இவ்வில்லம்போல் எத்தனையோ இல்லங்கள் கொடைவள்ளர்களையே நம்பியுள்ளது. எனவே இவ் இல்லத்தில் உள்ள பிள்ளைகளைப் பார்க்கும் போது இவர்களுடைய எதிர்காலம் என்ன? இீத்தனை பிள்ளைகளும் சபிக்கப்பட்டவர்கள் என்பதா அல்லது இறைவனின் அன்புக்கு பாத்திரமானவர்கள் என்பதா? நிச்சயமாக இக்குழந்தைகளும் சாதிக்கப் பிறந்தவர்கள் தான் என எண்ணும் அளவிற்கு நம்பிக்கையை வளர்க்கிறது நாஹேன்ம் பிட்டி – சித்திரா வீதியில் அமைந்துள்ள மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் பாடசாலையை பார்க்கும் போது.

இங்குள்ள குழந்தைகளை பெற்றோர்களே காலையில் அழைத்து வந்து விடுகிறார்கள். அதேபோல் பாடசாலை விட்டு செல்லும் வேளையிலும் அவர்களே அழைத்துச் செல்கிறார்கள். எனவே சாதாரண குழந்தைகளை போல் பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் இவர்களுக்கு கிடைக்கிறது. கல்வி அறிவு, விளையாட்டில் ஆர்வம் மற்றும் இசை, நடனம், நீச்சல் என எல்லா விதத்திலும் பிள்ளைகளை இங்கு பயிற்றுவிக்கின்றனர். இதற்காக மாதமாதம் பெற்றோர்களிடமிருந்து பணம் அறவிடப்படுகிறது.

இப்பாடசாலையில் 2ஆயிரத்து 500 மாணவர்கள் (ஆண், பெண்) கல்வி கற்கின்றார்கள். மேலைத்தேய ஆசிரியர்கள் முதற்கொண்டு இங்கு பணியாற்றுகிறார்கள். இங்கு படித்து வளர்ந்த பல குழந்தைகளில் முன்னேற்றம் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு குறைபாட்டுடன் பிறப்பதற்கு காரணம் என்ன? சிலர் பிறக்கும் போது ஆரோக்கியமான குழந்தைகளாக இருக்கிறார்கள். சில வருடங்கள் செல்ல அவர்களுடைய செயல்



## ஆடைத் தொழிற்சாலைகளில் நடப்பது என்ன

**ஆடைத்தொழிற்சாலையானது 1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பமான போதிலும் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதி கூடிய அளவில் விஸ்தரிக்கப்பட்டு ஏராளமான இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. 2005ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலைகள் சர்வதேச ரீதியில் தரம் உயர்த்தப்பட்டு அதிக கூடிய வருமானத்தை ஈட்டி தரும் நிலைகளில் முன்னணியில் நிற்கிறது.**

நமது நாட்டில் அந்நிய வருமானத்தை ஈட்டித்தருவதில் முன்னணியில் திகழ்வதில் ஆடைத்தொழிற்சாலைகளும் ஒன்று . பெரும்பான்மையான இளம் வயது பெண்களும், ஆண்களும் இத் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். அதிலும் மலையகத்தவர்களும் வறிய குடும்பத்தவர்களைச் சேர்ந்த பிள்ளைகளுமே இதில் வேலை செய்யும் தொழிலாளர்கள். மிகவும் கஷ்டபட்டு வேலை செய்கின்றனர். ஆனால் அவர்களுக்கான ஊதியம் மற்றும் விடுமுறைகள் சரியான முறையில் வழங்கப்படுகின்றதா? இவர்கள் தமது அடிப்படை உரிமைகளுடன் வாழ்கின்றனரா ? இவர்களுக்கான ஓய்வூதியம் விடுமுறை கொடுப்பனவுகள் எல்லாம் சரியான முறையில் வழங்கப்படுகின்றதா? குறிப்பாக இவ்வாறான தொழிற்சாலைகளில் பாலியல் வன்முறைகள், துஷ்பிரயோகம் போன்றவை நிகழ்வதாக தெரிகிறது.

- ✦ உழைப்பிற்கு தகுந்த ஊதியம் பெறுகின்றனரா?
- ✦ இவர்களின் உரிமைகள் பேணப்படுகின்றதா?
- ✦ வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனரா?

இவர்களுடைய நிலையை அறிய அண்மையில் கண்டி–பன்விலவில் உள்ள பிரபல ஆடைத்தொழிற்சாலை ஒன்றிற்கு சென்றிருந்தோம். இந்த ஆடைத்தொழிற்சாலையில் சுமார் 800 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இந்நிறுவனத்தின் தலைமைத்துவம் எம்மை சந்திப்பதைத் தவிர்த்து வந்த போதிலும் இங்கு பணி புரியும் பல பெண்கள் முன் வந்து தமது கஷ்டங்களை சென்னார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு அமைய அவர்களின் பெயர்களை இங்கு பிரசுரிக்கவில்லை.

கடந்த 8 வருடங்களாக இவ்வாடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஒரு பெண் கூறிய கருத்து வருமாறு,

எனக்கு 16 வயது இருக்கும் போது இத் தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்தப் பட்டேன். இந்த ஆண்டுடன் 8 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் நான் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமில்லை. நாங்கள் படிக்காதவர்கள் தான். கஷ்டப்பட்டவர்கள் தான். ஆனால் தன் மானத்தை விட்டு வாழ்பவர்கள் இல்லை. இந்த நிறுவனத்தின் நிறைய பெண்கள் வேலை செய்கின்றனர். எங்களுக்கு மேற்பார்வையாளர்களாக ஒரு ஆணும், ஒரு பெண்ணும் இருக்கிறாங்க. உண்மையைச் செல்லப்போனால் நாங்க எங்க குடும்ப கஷ்டத்துக்காக முள்மேல் நிற்கிறோம் என்று தான் சொல்ல வேண்டும். அவ்வளவுக்கு இங்க எங்களை வாட்டுறாங்க. முதலாவதாக இன துவேசம் இருக்கு .சிங்கள இனத்தவர்களுக்கு ஒரு மாதிரியும், தமிழர்களுக்கு ஒரு மாதியும் தான் நடத்துறாங்க. அடுத்தது அதிகமாக எங்களிடமே வேலைகளை வாங்குவார்கள். ஒரு வேளை முடியும் முன்பே அடுத்த வேலையைச்செய்யச் செல்வார்கள். நான் வந்த புது சில வெட்டித்தர உடைகளை ஒவ்வொரு மிசினில் வேலை செய்பவர்களிடமும் கொண்டு போய் வைப்பது, அயன் பண்ணுவது என வேலை செய்ய வைத்தார்கள் . ஒரு வாரத்திலேயே இரவு வேலையும் வாங்க ஆரம்பித்தார்கள். பெட்டியில் உடைகளை அடுக்குவது, முதல் கொண்டு செய்ய வைத்தார்கள். எங்களுக்கு சம்பளம் மிகக் குறைவு. வேலை நேரத்தை தவிர்த்து மேலதிக நேரம் வேலை செய்தால் கொஞ்சமாவது காசு கிடைக்கும். எங்களுக்கு விடுமுறை என்பது இல்லை. எல் லா நாட்களும்வேலைதான். காலை 8.30 மணிக்கு வந்தால் இயந்திரத்துடன் இயந்திரமாக நாங்களும் மாலை 5 மணிவரை வேலை செய்கிறோம். சில வேளை இரவு 9 மணி வரை வேலை செய்கிறோம். வேலைக்கு கொஞ்சம் தாமதமாக வந்தாலும் சம்பளத்தில் பிடித்து விடுவூர்கள். அதுபோல் தைப்பவர்களின் வேலையில் தவறுகள் இருந்தாலும் சம்பளத்தில் பிடித்துவிடுவார்கள் . முதலாளிமார்களை விட இங்கிருக்கும் மேற்பார்வையாளர்கள்





**எங்களுக்கு விடுமுறை என்பது இல்லை. எல் லா நாட்களும் வேலை தான் . காலை 8.30 மணிக்கு வந்தால் இயந்திரத்துடன் இயந்திரமாக நாங்களும் மாலை 5 மணிவரை வேலை செய்கி றோம். சில வேளை இரவு 9 மணி வரை வேலை செய்கிறோம்**

தான் மோசம். அதிலும் ஆண் மேற்பார்வையாளர்கள் ரெம்ப மோசம். பெண்களை தொட்டு தொட்டுப்பேசுவது, அவங்கட இஸ்டத்திற்கு இணங்க வைப்பது போன்றவை நடக்குது. நாங்க கொஞ்சம் மறுத்தாலோ அல்லது முறைத்தாலோ எங்களால் நிம்மதியாய் வேலை செய்ய முடியாது. ஏதாவது விதத்தில் எங்களை கஷ்டப்படுத்திக்கொண்டே இருப்பாங்க . நாங்கள் வேலை செய்தாலும், வேலை செய்யல எண்டுதான் சொல்லுவாங்க. சம்பள உயர்வு சம்பந்தமாக கூட எங்களுக்காக பேச மாட்டாங்க.நாங்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறம் என்று கூறினார். தையல் வேலையில் ஈடுபடும் பெண் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் ,

நான் நான்கு ஆண்டுகளாக வேலை செய்கிறேன். எனக்குப் பிறகு வந்தவங்களுக் கெல்

# பண்ணைக் கடல் பகுதியை ஆழமாக்க யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குருநகர் பண்ணைக்கும் இடையிலான கடற்பரப்பை 12 அடி ஆழம் தோண்டி ஆழமாக்கப்பட வேண்டும் என கடற்தொழில் நீரியல்துறை பணிப்பாளர் த. தர்மலிங்கம் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜெய்க்கா உயர் மட்டக் குழுவினர் கூட்டுறவு மீன்பிடி, விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இவ் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இலங்கை அரசிற்கு கூடுதலான அன்னியச் செலாவணியை பெற்றுத் தரக்கூடிய பகுதியாக குருநகர் கடற்பரப்பே அமைந்துள்ளது.

யாழ். குடாநாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் மேற் கொள்ளப்படாத வகையில் குருநகர் கடற்பரப்பிலே 16 வகையான மீனவத் தொழில்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பண்ணைக் கடற்பகுதியில் ஆழ்கடல் மீன்பிடி வள்ளங்கள் தரித்து நிற்கக்கூடிய வசதிகள் இல்லை இதனால் ஆழ்கடல் மீன்பிடி பாதிப்படைகின்றது.

இதற்கமைவாக குருநகர் சீனோரில் இருந்து பண்ணை வரையான கடற்பரப்பு ஆழமாக்கப்படும் போது மீனவர்களின் வாழ்வாதாரம் மேன்மையடையும்.

மேலும் குருநகர் துறைமுகம், கலங்கரை விளக்கு, மீனவர் கடற்தொழில் கட்டிடங்கள் மீனவர் சந்தைப்படுத்தும் இடங்கள் புனரமைப்பதுடன் கருவாடு பதனிடும் தொழிற்சாலைகள், மீன்களை ரின்களில் அடைத்து ஏற்றுமதி செய்வதற்கான தொழிற்சாலைகள் அமைத்துத்தர வேண்டும்.

அத்துடன் கடன் வசதிகள் நீண்டநாள் கடலில் தங்கியிருந்து மீன்பிடித்துக் கொள்வதற்கான ஆழ்கடல் வள்ளங்கள் என்பவற்றை பெற்றுத்தர வேண்டும் என கடற்தொழில் நீரியில் வளத் துறைப் பணிப்பாளர் ரீ. தர்மலிங்கம் மீனவர் தொடர் பான பல கோரிக்கைகளை அரச அதிபர் முன்வைத்தார். (ச-7)

# வருடாந்த விற்பனை விழா

(கல்வயல்)

சாவகச்சேரி அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபையின் வருடாந்த விற்பனை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் அமைந்துள்ள திருச்சபைக் கட்டடத்தில் சபை குரு வண. டானியல் ரஞ்சித் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விற்பனை விழாவில் பல உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் மலிவு விற்பனையில் விற்கப்படவுள்ளதாக சபை குரு தெரிவித்துள்ளார். (6-4-31)

# வெல்டிங் பயிற்சி நெறி விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சர்வோதய் நிறுவனத்தினால் மின் காய்ச்சி இணைப்பு (வெல்டிங்) பயிற்சி நெறி நடைபெற்று வருகிறது.

இதில் கலந்து கொள்ள விரும்புவர்கள் நாளை திங் கட்கிழமை சர்வோதய மாவட்ட அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட இணைப்பாளர் அ.கி.சிவ சுப்பிரமணியம் கேட்டுக் கொள்கின்றார். (ச-6)

# உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் தற்போது நடைபெற்று வரும் பருவகாலப் பரீட்சைக்கு முன்னர் பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைய தவறிய யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவன இறுதி வருட எச்என்டிஏ, எச்என்டிசி, என்டிபிஎவ், என்டிபிஎஸ், என்டிஇ, கற்கை நெறி மாணவர்களுடனான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக் கலந். துரையாடல் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய இறுதி வருட மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க செயலாளர் வி. தயாபரன் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 110 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 50 |
| தக்காளி | 30 | 40 | 35 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 55 |
| கோவா | 110 | 120 | -- |
| கரட் | 90 | 100 | 80 |
| பூசணி | 30 | 40 | 25 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 20 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 65 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 40 | 50 | 40 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கரணைக் கிழங்கு | 35 | 45 | 50 |
| பயிற்றங்காய் | 40 | 50 | 40 |
| லீக்ஸ் | 90 | 100 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 35 |
| கறிமிளகாய் | 50 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 15 |
| தேசிக்காய் | 90 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 20 |

# வாரம் ஒரு தகவல்

## பல்லும் பாதுகாப்பும்

"என்ன சேர்... உங்களுடைய குழந்தையா இது?"

"ஆமாம்!"

"எங்கே போயிட்டு வாறீங்க?"

"பல் டாக்டரைப் பார்த்துவிட்டு வருகிறேன்."

"எதற்கு?"

"இந்தக் குழந்தைக்குப் பல்வரிசை சரியாக இல்லை. அதைக் கொஞ்சம் சீராக்க முடியுமா என்று யோசனை கேட்பதற்காகப் போனேன்."

"இது ஒரு பெரிய குறையா சேர்?"

"ஆமாம்... சமீபத்தில் சிங்கப்பூரில் ஒரு சோதனை நடத்தினார்களாம். சீரான பற்கள் உள்ள குழந்தைகளை ஒரு பிரிவாகவும் சீரான பல்வரிசை இல்லாத குழந்தைகளை இன்னொரு பிரிவாகவும் பிரித்து இரண்டு பிரிவுக்கும் பொதுவாக ஒரு போட்டி நடத்தினார்களாம். அதில் முதல் பிரிவுதான் ஜெயித்ததாம்."

"ஏன் அப்படி?"

"அந்தக் குழந்தைகளுக்கு ஆக்கத்திறன் (Creative thinking) அதிகமாக இருக்கிறதாம். நல்ல தோற்றம் மனத் தெம்பைக் கொடுக்கிறதாம். பற்களில் குறைபாடு இருந்தால் முகத் தோற்றமும் வித்தியாசப்படுகிறதல்லவா... அதனால் அந்தக் குழுந்தைகளுக்கு அவர்களையும் அறியாமல் ஒருவிதத் தாழ்வு மனப்பான்மை உண்டாகி விடுகிறதாம். எதிலும் உற்சாகமில்லாமல் சோர்ந்து போய்விடுகிறதாம்."

"அதனால் தான் நீங்களும் உங்கள் குழந்தையின் பல் அமைப்புச்சரியாக இருக்க வேண்டுமென்பதில் இவ்வளவு தீவிரமாக இருக்கிறீர்களா?"

"ஆமாம்! ஆனாலும் இது இப்பவே ரொம்பக் குறும்பு... ஆஸ்பத்திரியில் இது வாயைத் திறந்ததும் தான் அந்த டாக்டர் ரொம்ப சந்தோஷப்பட்டார்."

"ஏன்?"

"அதற்குப் பின்னர் தானே... அவர் தன் விரலை என் குழந்தை வாயிலிருந்து வெளியே எடுக்க முடிந்தது'

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

13.09.2009
(ஆவணி 28, ஞாயிற்றுக்கிழமை)
நவமி பிற்பகல் 2.17 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 11.57 மணிவரை
இராகுகாலம் 4.33 - 6.03 மணிவரை
சுபநேரம் 9.03 - 10.33 மணிவரை
நான்காம் ஆவணி ஞாயிறு

| | |
|---|---|
| மேடம் | நற்கீர்த்தி, எடுத்த காரியம் கைகூடும், தனலாபம், மனோதைரியம். |
| இடபம் | போசன சுகக்குறைவு, தனவிரயம், மனோசங்கடம், வேலையில் ஆர்வம். |
| மிதுனம் | போசன சுகம், வெகுமானம், கௌரவமான நிலை, முயற்சி கைகூடும். |
| கடகம் | குடும்பக் கவலை, பிரயாணம், பிறருக்கு உதவுதல், சுபசெலவு. |
| சிங்கம் | குடும்ப நன்மை, தனவருவாய், போசன சுகம், முயற்சி கைகூடும். |
| கன்னி | உற்சாகம், காரிய நன்மை, தேக நலன், தொழில் சிந்தை. |
| துலாம் | பயந்த சுபாவம், பிரயாணம், ஆரோக்கியக்குறைவு, பெரியோர் உதவி. |
| விருச்சிகம் | குடும்பக் கவலை, ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், போசன நன்மை. |
| தனுசு | மனோ தைரியம், செல்வாக்கு, முயற்சி கைகூடும், விருந்துபசாரம். |
| மகரம் | சத்துரு ஜெயம், தொழில் நன்மை, மனமகிழச்சி, காரிய அனுகூலம். |
| கும்பம் | காரிய இடையூறு, அமைதிக் குறைவு, சிறுவியாதி, தனவிரயம். |
| மீனம் | உறவினர் சந்திப்பு, வாகன சுகம், நல்ல முயற்சி, திடீர் நன்மை. |

வளவன்

# 20-20 கிரிக்கெற் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்படவுள்ள பி.எஸ். குமாரசுவாமி ஞாபகர்த்த இருபது - இருபது கிரிக்கெற் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை முதல் தொடர்ந்து நடைபெறவுள்ளதாக கழக செயலாளர் அறிவித்துள்ளார். (4)

# அகதிகளோடு நான்...

வறுமையின்
சொந்தம் வெறுமையும்
தனிமையும்
வறுமையின்
சுற்றம் பசியும்
பட்டினியும்
பொறுமை இருந்தும்
பொழுது புலராமல்
வாழ்வும் மலராமல்
வளராத தேய் பிறைபோல்
வாழ்க்கை நகர்கிறது
பசியும் பஞ்சமும்
வறியோர் தேசிய
உடமையாய்
கசியும் கண்ணீரோடு
காத்திருக்கும்
வாடிய உடலங்கள்...

மகே-மேனன்
கொற்றையூர்

## திரை விமர்சனம்




நட்சத்திரங்கள்:-ப்ரிதிவிராஜ், ஷக்தி, ப்ரியாமணி, கார்த்திக்குமார், பாக்கியராஜ் மற்றும் பலர்

இயக்கம்:- ஜி.என்.ஆர். குமாரவேலன்

மீண்டும் தமிழ் சினிமாவில் ஒரு கல்லூரி களம். ப்ரிதிவிராஜ், ஷக்தி, ப்ரியாமணி, கார்த்திக்குமார் நடிப்பில் சன்.டி.வி வெளியிட்டிருக்கும் படம் "நினைத்தாலே இனிக்கும்" மலையாளப் படமான கிளாஸ்மேட்ஸ் படத்தின் தழுவலான இப் படத்தை ஜெமினி பிலிம் சர்க்யூட் என்ற நிறுவனம் தயாரித்திருக்கிறது.

ப்ரிதிவிராஜ் 8 ஆண்டுகள் கழித்துக் கல்லூரியில் நடக்கும் get-to-gether விழாவுக்கு வரும் வழியிலே கதை சொல்லி வருகிறார். கல்லூரியில் ப்ரிதிவிராஜுக்கு கார்த்திக்குமாருக்கும் இடையில் அடிக்கடி சண்டை நடக்கும். ஷக்தி இருவருக்குமே நல்ல நண்பன். வழக்கமாக வர கல்லூரித் தேர்தலில் பிரச்சினை பெரிதாக வெடிக்கிறது.

நண்பர்களின் வாழ்க்கை என்ன ஆனது ப்ரியாமணியும் ப்ரிதிவிராஜும் ஒன்றாக இணைவார்களா? இதுதான் நினைத்தாலே இனிக்கும் படத்தின் சஸ்பென்ஸ்.

ப்ரிதிவிராஜ் ரவுடியா அல்லது ஹீரோவா என்று ஒன்றும் புரியவில்லை.ப்ரியாமணி இடையிடையே வந்து போகிறார். பாக்கியராஜ் தன் பங்கை சிறப்பாக செய்திருக்கிறார்.

பாலசுப்பிரமணியனின் ஒளிப்பதிவு நன்றாக இருக்கிறது.

குமரவேலனின் இயக்கத்தில் நினைத்தாலே இனிக்கும்– சுமார் ரகம்

## மீண்டும் நடிப்பாரா ஜோதிகா: சூர்யா பதில்



டைரக்டர் ஹரி இயக்கத்தில் சூர்யா நடித்து வரும் படம் சிங்கம்.ஸ்டூடியோ க்ரீன் நிறுவனம் சார்பில்கே.ஈ.ஞானவேல் ராஜா தயாரிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு காரைக்குடியில் நடந்து வருகிறது. படப்பிடிப்பின் இடையே சூர்யா நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்,

இயக்குநர் ஹரியின் இயக்கத்தில் நான் நடிக்கும் 3 ஆவது படம் இது என்றார்.

வித்தியாசமான கெட் -அப் போடுவது குறித்த கேள்விக்கு பதில் அளித்த சூர்யா, தசாவதாரம் படத்தில் கமலஹாசன் வித்தியாசமான 10 வேடங்களில் நடித்திருந்தார். அவரைப்போல வேறு யாரும் செய்ய முடியுமா என்பதே கேள்விக்குறிதான்.ஆனாலும் வாய்ப்புக் கிடைத்தால் முயன்று பார்க்கவேண்டும் என்ற எண்ணம் எனக்கு உள்ளது என்றார்.ஜோதிகா மீண்டும் சினிமாவில் நடிப்பாரா என்று கேட்டதற்கு, இப்போதைக்கு ஜோவிற்கு நடிக்கும் எண்ணம் இல்லை. ஆனாலும் நடிப்பது அவரது சொந்த விருப்பம் என்றார் சூர்யா.

## போலோ உலகக் கோப்பையில் ரஹ்மானின் இசை நிகழ்ச்சி




அமெரிக்காவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கோப்பை போலோ போட்டியின் தொடக்க விழாவில் இசைப்புயல் ஏ.ஆர். ரஹ் மான் கலந்துகொண்டு இசை நிகழ்ச் சியை வழங்கவுள்ளார். அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டனில் அடுத்த ஆண்டு ஜுன் 11 மற்றும் 12 ஆகிய இரு நாட்கள் போலோ உலகக் கோப்பை போட்டி நடைபெற வுள்ளது.

இந்தப் போட்டியில் முதல் முறை யாக இந்தியாவும் பங்கேற்கி றது. இந்தியாவிலிருந்து நான்கு பேர் கொண்ட குழு இப்போட்டியில் கலந்து கொள்கிறது.

இந்தியா கலந்துகொள்ளும் போட்டி வோஷிங்டனில் உள்ள நேஷனல் மால் பூங்காவில் நடைபெறும். போட் டித் தொடக்க விழாவில் இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மானின் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.பிரபல பொப் குழுவான புஸ்ஸிகேட் டால் குழுவினருடன் இணைந்து ரஹ்மான் நிகழ்ச்சியை வழங்குகிறார்.

## ரஜினிக்காக காத்திருக்கும் வாசு



ரஜினியை வைத்து "சந்திரமுகி"யை வெற்றிப்படமாக்கிய வாசு, "சந்திரமுகி பாகம் 2" எடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்.இதுபற்றி ரஜினியிடமும் பேசிவிட்டார்.

ஆனால் ரஜினி இதுவரை பதில் எதுவும் சொல்லவில்லை. ஓ.கே.சொல்லிவிட்டால் அடுத்த கணமே வாசு பரபரப்பாகி விடுவார். எந்திரன் படப்பிடிப்பில் இருக்கும் ரஜனி இனிமேல் நடிக்கமாட்டார். இதுவே கடைசிப்படம் என்ற தகவல் இப்போது மெல்லக் கசிய ஆரம்பித்துள்ளது.

இதனால் மிரண்டுபோன வாசு, ரஜனி ஓ.கே. சொல்லமாட்டாரா என்ற ஏக்கத்தில் காத்திருக்கிறார்.ஜோதிகா நடித்த பாத்திரத்தில் விமலாராமனையும், நயன்தாரா, வடிவேலு பாத்திரங்களை அவர்களை வைத்தும் இந்தப் படத்தை உருவாக்குவார்கள் என்று தெரிகிறது.

## முன்னணி நாயகிகளை மிஞ்சிய சினேகா



தமிழ் திரையுலகில் தற்போது முன்னணியில் இருக்கும் தமன்னா, நயன்தாரா, த்ரிஷா உள்ளிட்ட நாயகிகளை மிஞ்சி பிஸியாக இருக்கிறார் நடிகை சினேகா. தமன்னா இப்[illegible]ன்டேன் காதலை, பையா, தில்லா லங்கடி, உரிமைக்குரல் ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

நயன்தாராவோ ஆதவன் படத்தில் மட்டுமே நடித்து வருகிறார். த்ரிஷாவை பொறுத்தவரை, விண்ணைத் தாண்டி வருவாயா, சென்னையில் ஒரு மழைக் காலம் ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

ஸ்ரேயா ஜக்குபாய், குட்டி, சிக்குபுக்கு ஆகிய படங்களில் நடித்து வருகிறார். சுனேனாயாதுமாகி, கதிர்வேல், திருத்தணி ஆகிய படங்களில் ஒப்பந்தமாகியிருக்கிறார்.

ஆனால் நடிகை சினேகாவோ... தற்போது பவானி ஐ.பி.எஸ்., நூற்றுக்கு நூறு, அறுவடை, அங்காடித்தெரு, முரட்டுக்காளை மற்றும் கோவா ஆகிய படங்களில் பிஸி யாக இருக்கிறார். முன்னணி நாயகிகளை மிஞ்சி பிஸி யாகி இருக்கும் சினேகாவுக்கு தமிழ் திரையுலகில் மீண்டும் ஒ[illegible] ரவுண்ட் வரவேண்டும் என்பதுதான் விருப்பமாம்.

## திருமணத்துக்கு பிறகு மீனா மீண்டும் நடிக்கிறார்



தமிழ் படவுலகில் பிரபல நடிகையாகத் திகழ்ந்தவர் மீனா. இவர் தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிப் படங்களிலும் கதாநாயகியாக நடித்தவர். கடந்த2 மாதங்களுக்கு முன்பு பெங்களூரைச் சேர்ந்த கம்ப்யூட்டர் என்ஜினியரை திருமணம் செய்து கொண்டார்.

திருமணத்துக்குப் பிறகும், சினிமாவில் நடிக்க தனக்கு கணவராக வரப் போகிறவர் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.அதன்படி அவர் மீண்டும் சினிமாவில் நடிக்க முடிவு செய்தார்.

டி.பி.கஜேந்திரன் இயக்கும் விடாதே பிடி என்ற தமிழ்ப் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.இந்தப் படத்தில் நடிகர் பிரபு கதாநாயகனாக நடிக்கிறார்.

இது முழு நீள காமெடிப் படமாகத் தயாராகிறது.தமிழ்ப் படத்தைத் தொடர்ந்து மலையாளம், தெலுங்கு உள்ளிட்ட தென்னிந்திய மொழிப் படங்களிலும் முக்கிய வேடங்களில் நடிக்க மீனா திட்டமிட்டுள்ளார்.

## சினி துளிகள்




* இயக்குநர்கள் நடிகர்களாகக் கூடாது என்று பகிரங்கமாகத் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார் சீயான். விக்ரம் காரணம் கேட்டால், இயக்குநர்கள் நடிகளாகிவிட்டால் எங்களை இயக்குவது யார்? என்று கேட்கிறார்.
* கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன் படத்திற்குப் பிறகு படத்தை இயக்குவதைத் தற்காலிகமாக நிறுத்திவைத்திருந்த ஒளிப்பதிவாளர் ராஜீவ் மேனன், விரைவில் அபிஷேக் பச்சன் -ஐஸ்வர்யா ராய் நடிக்கும் புதிய திரைப்படத்தை ஹிந்தியில் இயக்கவுள்ளாராம்.
* இலங்கைத் தமிழர் பிரச்சினையால் தமிழக மீனவர்கள் சந்திக்கும் இன்ப துன்ப சம்பவங்களை மையமாக வைத்து, "மீனவச் செல்வன்" என்ற பெயரில் புதுமுக இயக்குநர் டி.வி. செந்தில்குமார் ஒரு படத்தை இயக்குகிறார்.

# ...க்கி

## ...ன் வாழ்க்கை




**இவர்களுடைய எதிர்காலம் என்ன?**

**இத்தனை பிள்ளைகளும் சபிக்கப்பட்டவர்கள் என்பதா அல்லது இறைவனின் அன்புக்கு பாத்திரமா ...வர்கள் ...பதா?**

பாடுகள் மாற்றத்தினால் அவர்கள் இனம் காணப் படுகிறார்கள். எனவே இதற்கான மருத்துவ ரீதி யிலான விளக்கம் அடுத்த இதழில் தொடரும்!

## ...ன்ன??? அம்பலம்

லாம் சம்பளம் உயர்த்திக்கொடுக்கிறாங்க. எனக்கு இன்னும் அதே சம்பளம் தான். பெரு நாளுக்கு முற்பணம் கேட்டால் கூட கொடுக்க மாட்டாங்க. கடைசி நேரத்தில் தான் கொடுப்பாங்க. பெரு நாளுக்கு முன்பு குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே எங்களுக்கு வேலை அதிகமாகி விடும். இரவு 11 மணிவரை கூட நாங்கள் வேலை செய்வோம் . அந்நேரங்களில் எங்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. அதே போல எங்களுக்கு பௌர்ணமி விடுமுறை எல்லாம் இல்லை. கட்டாயம் வேலை செய்தாகனும். மலையகத்தைப் பொறுத்தவரை பெரும்பாலும் தனியா...க்கு சொந்த... ஆடைத்தொழிற்சாலைகளே இருப்பதால் எங்களால் எதுவும் பேச முடியாது. அப்படியே கேட்டாலும் வேலையை விட்டு நிறுத்தி விடுவாங்க. அதனால் பேசாமல் இருக்கிறோம்.

மற்றுமொரு பெண் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்க அதிகம் படிக்கவில்லை. எங்கட பெற்றோர் தோட்டத்து வேலை செய்கிறாங்க. நாங்கள் இந்த ஆடைத்தொழிற்சாலையில் வேலை செய்யிறம். நான் இருக்கும் முன்பு கொழும்பில் உள்ள ஆடைத்தொழிற்சாலையில் வேலை பார்த்தேன். அங்கும் இப்படித் தான் நல்லா வேலை வாங்குவார்கள். சம்பளம் மட்டும் கொடுக்க மாட்டாங்க. எனக்கு கிடைக்கிற சம்பளம் என்னோட வாடகை மற்றும் உணவிற்கே சரி. பிறகு எப்படி வீட்டுக்கு அனுப்புவது இப்ப ஊரிலேயே இருப்பதால் ஓரளவு வருமானம் வருகிறது. எங்களுக்கு வேலைக்கஷ்டத்தை விட இங்க ஆண் சுப்பர்வைசர்மார்களுடைய துஷ்பிரயோகங்கள் தான் அதிகம். சும்மா சும்மா தொட்டுப்பேசுவாங்க, சில வேளையில் அசிங்கமான வார்த்தையில கூட பேசுவாங்க, கொஞ்சம் சின்னப் பெண்களாக இருந்தால் அவ வாழ்க்கையையே கெடுத்திடுவாங்க. அதே நேரம் நாங்க இந்த மாதிரியான ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்கிறதால நாங்கள் என்னவோ கெட்ட பெண் கள் என்று தான் மத்தவங்க நினைக்கிறாங்க .ஆனால் நாங்கள் கஷ்டத்தால் வேலைக்கு வாறம். இங்கேயும் எவ்வளவு கஷ்டத்திற்கு மத்தியில் வேலை செய்கிறோம்.

இப்படி பாலியல் துஷ்பிரயோகமோ அல்லது உங்களுக்கு வழங்கப்படவேண்டிய விடுமுறைகள் வழங்கப்படாமை தொடர்பாக உங்களுக்கு முறையிடுவதற்கு யூனியன் ஒன்றும் இல்லையா?.

இருக்கு அதில் உள்ளவர்களே அப்படியானவர்களாக இருக்கையில் நாங்கள் எப்படி சொல்வது .அத்தோடு சில பெண்களே மற்றப்பெண்களை வன்முறைக்கு உட்படுத்துகின்றார்கள். உணவு வேளையின் போது கூட வேலை வாங்குவது கட்டாயத்தின் பேரில், சீட்டு போன்றவற்றில் இணைப்பது போன்றவை நிகழ்கிறது. எங்களுக்கு கிடைக்கிற சம்பளமே குறைவு இதில் சீட்டு எல்லாம் கட்ட இயலாது என்றால் விடமாட்டாங்க. நிறையப்பேர் இப்படி சீட்டுப் பிடிப்பதாக சொல்லி பணத்தை எடுத்திட்டு ஏமாத்திடுவாங்க. அதனால் தான் நாங்க இங்க சீட்டு போடுகிறது இல்லை.

பொதுவாக இலங்கையில் இயங்கி வரும் சகல ஆடைத் தொழிற்சாலைகளிலும் இவ்வாறு பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இந்த பெண்களின் பிரச்சினைகள் தொடர்பில் எமது பார்வைகள் தொடரும்.

# அழகுக்கலை கலாசாரத்தைப் பாதிக்கின்றதா?

**ஆசைக்கும், அழகுக்கும் அடிமையாவது அதிகம் பெண்கள் தான். தன்னை மாத்திரமின்றி தன்னைச் சான்றோரையும் தான் வசிக்கும் இல்லத்தையும் எப்போதும் அழகாக வைத்திருப் பார்கள். ஆனால் இன்று அதிகளவான பெண்கள் வேலைக்குச் செல்கின்றனர். அவர்களால் அவர்களுடைய அழகைக் கூடபேண முடியாத நிலையில் தான் உள்ளனர். அதே நேரம் அவர்களை அழகாக ஜொலிக்க வைக்க இன்று பல்வேறு அழகு சாதன பொருட்களும் அழகுசாதன நிலையங்களும் உருவாகியுள்ளது.**



இவ்வாறாக உருவாகி உள்ள அழகு நிலையங்கள் எல்லாம் சரியான முறையில் வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்கின்றதா ? ஒழுங்கான முறையில் பயின்று வந்த அழகுக்கலை நிபுணர்களைக்கொண்டு இயங்கும் நிலையங்கள் வாடிக்கையாளர்களின் தேவைகளை நல்ல முறையில் பூர்த்தி செய்கின்றதா? அதே நேரம் இவ்வாறான அழகுக்கலை நிபுணர்கள் அழகுக்கலையில் புதிய யுத்திகளைக் கையாள்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. இது ஒரு புறம் இருக்க இந்த அழகுக்கலை எமது கலாசாரத்தைக் கெடுக்கின்றதா என்ற கேள்வியும் நிலவுகின்றது. இது தொடர்பான விளக்கத்தினை செலூன் பியூட்டி லைன் நிர்வாகியும் பிரபல அழகுக் கலை நிபுணருமான தனுறஹிக்கிடம் கேட்ட போது அவர் வழங்கிய விளக்கம்.

**கேள்வி: இன்று பல இடங்களில் அழகுக் கலை நிபுணர்களால் ஏராளமான அழகுக்கலை நிலையங்கள் நடத்தப் பட்டு வருகின்றது. இவை அனைத்தும் ஆரோக்கியமான முறையில் நடைபெறு கின்றதா என கூற முடியாது. காரணம் சிலர் போட்டு விடும் பேஷியல், மேக்கப் போன்வற்றால் பலருக்கு பாதகம் நிகழ்வதைக் காணக் கூடியதாகவுள்ளது. இது பற்றி என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

பதில்: உண்மைதான் நீங்கள் சொல்வதைப் போல என்னிடம் பலர் வந்திருக்கின்றார்கள். இவர்கள் வேறு பல அழகு நிலையங்களுக்குச் சென்று அங்கு அவர்கள் உபயோகிக்கும் தரம் குறைந்த பொருட்களால் முகத்தில் பருக்களுடனும், சில சிதைவுகளுடனும் வந்திருக்கின்றார்கள். நான் பல சிகிச்சைகளை மேற்கொண்டு அவர்களை சுகப்படுத்தி நல்ல தரமான பேஷியல் மூலம் அவர்களை அழகுப்படுத்தியிருக்கிறேன். உண்மையில் அழகு நிலையங்களில் கடமை புரிபவர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். வெறுமனே தொலைக்காட்சியில் ஒலிபரப்பாகும் அழகுக் குறிப்புக்களை குறித்துக்கொண்டு அடுத்தவருக்கு செய்யப்போகக் கூடாது. குறிப்பாக மசாஜ் செய்வதில் கவனம் வேண்டும் பலர் அதை தவறுதலாகச் செய்கின்றனர். இதற்குக் காரணம் ஒழுங்கான முறையில் பயிற்சியின்மையே.

**கேள்வி: எமது முன்னோர்கள் இவ்வாறான பேஷியலோ எண்ணெய்க் குழியலோ மேற்கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் அழகாக தானே இருந்தார்கள். அண்மையில் தானே இவ்வாறான அழகு நிலையங்களில் அதிகரிப்பை காணக் கூடியதாகவுள்ளது?**

பதில்: ஆமாம் எமது முன்னோர்கள் குறிப்பாக பெண்கள் .வீட்டிலேயே இருந்தார்கள் வெளியே செல்வது குறைவு. அத்தோடு அவர்கள் கஸ்தூரி மஞ்சள், கடலைமா, சீயாக்காய், பயிற்றம்மா, போன்றவற்றையே தினமும் பாவித்து வந்தார்கள். நல்ல ஓய்வும் அவர்களுக்கு கிடைத்தது.

ஆனால் இன்று பெரும்பாலான பெண்கள் வேலைக்குச் செல்வோராக காணப்படுகின்றனர். அவர்களால் அவர்களுடைய எல்லாத்தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாது. குறிப்பாக மஞ்சள் பூசித்து அலுவலகம் செல்ல முடியாது.

அதேபோல் தலை நிறைய எண்ணெய் தேய்த்துக்கொண்டும் வேலைக்குப் போக முடியாது. வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு அவசரத்தில் வேலைக்குப்போகும் பெண்கள் அதே சூழற்சியில் மறுபடியும் வீட்டு வேலையே செய்கின்றார்கள். இப்படியே நேரம் நகர்கிறது, இதில் இவர்களுடைய அழகினைப் பேணுவதற்கு நேரம் இல்லை. அத்தோடு எமது சூழலும் மாசடைந்துள்ளது. எவ்வளவு தான் முகம் கழுவும் போது தரமான சோப் பாவித்தாலும் முகத்தில் உள்ள அழுக்குகளை முற்றாக அகற்ற முடியாது.

எனவே மாதத்திற்கு ஒரு தடவையாக பேஷியல் செய்வதன் மூலம் இந்த இறந்த செல்களை அகற்றி முகத்திற்கு புத்துயிர் அழிக்க முடியும்.

**கேள்வி: தற்போது நவீன நாகரீக முறையில் மணப்பெண் அலங்காரம், நாகரீக ஆடை அலங்காரம் என்பவற்றை காணக் கூடியதாகவுள்ளது. இது எமது கலாசாரத்தை பாதிப்பவையாக இல்லையா?**




பதில்: கலாசாரத்தைப் பாதிப்பதாக கருத முடியாது. காரணம் திருமணம் என்று வரும் போது ஒவ்வொருவரும் அவர்களுடைய கலாசாரத்திற்கு அமையத்தான் அலங்காரம் பண்ணச் செல்வார்கள். மேலதிகமாக நவீன ஆபரணங்கள் அல்லது மலர் அலங்காரங்கள் செய்வது உண்டு . பெரும்பாலும் மணமக்கள் வீட்டார்களுடன் கலந்தாலோசித்த பின்பே நாம் முடிவெடுப்போம். சிலர் ஆசைப்பட்டே எங்களுக்கு இவ்வாறு அலங்கரியுங்கள் என்பார்கள். சிலர் திரைப் படத்தில் வரும் ஒரு சில நடிகைகளின் உடை வடிவமைப்பை காட்டி அவ்வாறு எங்களை அலங்கரியுங்கள் என்பார்கள் . அவைகள் பெரும்பாலும் பதிவுத் திருமணங்களுக்காக இருக்கும் அவர்களாக ஆசைப்பட்டு கேட்கும் போது நாங்கள் அலங்கரிப்பது உண்டு.

**கேள்வி: உங்கள் அழகு நிலையத்திற்கு வரும் பெரும்பாலான பெண்கள் எவ்வாறன அலங்காரங்களை மேற்கொள்ள வருகிறார்கள்.**

பதில்: Facial , Body massage, Hair Cut and Clean போன்றவற்றுக்கு தான் அதிகமாக வருகிறார்கள்.

**எமது முன்னோர்கள் இவ்வாறான பேஷியலோ எண்ணெய்க் குளியலோ மேற்கொள்ளவில்லை. ஆனாலும் அவர்கள் அழகாகத் தானே இருந்தார்கள்**

**கேள்வி: நவீன முறையில் மின்சார உபகரணங்களின் உதவியுடன் முகத்துக்கு, உடலுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இது ஆரோக்கியமானதா?**

பதில்: தேவைக்கேற்ப மின்சார உபகரணங்களின் உதவியுடன் சிகிச்சை அளிப்பது தவறில்லை. குறிப்பாக கரும் புள்ளி அகற்றல், முகத்தில் உள்ள திட்டுக்களை போக்குவதற்கு இவ்வாறு பயன்படுத்துகிறோம். இதனால் எந்தவிதமான பக்க விளைவுகளும் ஏற்படாது.

**கேள்வி: பொதுவாக இஸ்லாமிய மதத்தவர்கள் தங்களுடைய பெண்பிள்ளைகளை சமூகத்தின் மத்தியில் முன் நிறுத்துவது குறைவு. நீங்கள் ஒரு முஸ்லிம் மதத்தவராக இருந்த போதிலும் எப்படி இவ்வாறாக அழகு நிலையத்தை நிறுவி வேலை பார்க்கும் துணிவு வந்தது?**

பதில் : நான் இத்துறைக்கு வருவேன் என்று எதிர்பார்க்க வில்லை. கேரளாவில் உள்ள என்னுடைய உற வினர்கள் வீட்டில் ஒரு சமயம் தங்கி நின்ற வேளை அழகு கலை யினை கற்றுக்கொண் டேன். பிறகு இங்கு வந்து மேலும் பயிற்சி மேற்கொண் டேன். தற் போது இரண்டு வருடங்களாக இந் நிலையத்தினை நடாத்தி வருகிறேன். எனக்கு பெரிதும் துணை நிற்பது என் அம்மா தான். இவ ருடைய வழி நடத்தலும் அவர் கொடுத்த உற்சாகமும் தான். என்னை இவ்வாறு வழி நடத்த வைத்தது.

**கேள்வி: இத்துறைக்கு வருபவர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனைகள் என்ன ?**

பதில்: அழகுக்கலையைப் பயின்றால் மட்டும் போதாது. ஏதேனும் அழகு நிலையத்தில் பயிற்சியும் பெறவேண்டும். குறைந்தது 2 வருட கால அனுபவமாவது பெற்று அதன் பின் சுயமாக அழகுக்கலை நிலையங்களை ஆரம்பியுங்கள் என்று தான் ஆலோசனைகள் வழங்குவேன் . வாடிக்கையாளர்களுக்கு நல்ல முறையில் அழகு சிகிச்சை வழங்குங்கள். பணத்திற்காக இன்றி சேவையை முன்னிட்டு செய்யுங்கள்.

# அப்பாவி மக்களை முகாம்களில் வைத்திருப்பதை அனுமதிக்க முடியாது

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்திற்கு எந்த விதத்திலும் தொடர்புபடாத அப்பாவி மக்களை இடைத்தங்கல் முகாம்களில் சிறை வைத்திருப்பதை அனுமதிக்க முடியாது. அவர்களை நடைமுறை வாழ்க்கைக்குள் உள்ளீர்க்க வேண்டும் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இடம்பெயர் முகாம்களில் தங்கியுள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அண்மையில் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினரும் குழுத் தலைவருமான அநுர குமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இன்று மூன்று இலட்சம் மக்கள் இடைத்தங்கல் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களால் தாம் விரும்பும் இடத்திற்குச் செல்ல முடியாது. சுதந்திரமாக நடமாட முடியாது. இம்மக்கள் தாம் தொடர்புபடாத யுத்தத்திற்காக இன்று தண்டனை அனுபவிக்கின்றனர். இம் முகாம்களில் பெற்றோரை இழந்த உறவினர்கள், ஆதரவற்ற 850 சிறுவர், சிறுமியர் உள்ளனர். கோர யுத்தத்தால் இப்பிள்ளைகள் அநாதைகளாகியுள்ளனர்.

அத்துடன் முகாம்களில் மக்கள் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். சுகாதார வசதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. நியூமோனியாவால் பலர் உயிரிழந்துள்ளனர். 200 பேருக்கு ஒரேயொரு மலசலகூடம் தான் உள்ளது. 70 ஆயிரம் சிறுவர், சிறுமியர் முகாம்களில் உள்ளனர். அப்பிள்ளைகள் சுதந்திரமாக ஓடித்திரியவோ விளையாடவோ முடியாத சூழ்நிலையில் உள்ளனர்.

மழைக் காலங்களில் வெள்ளம் நிரம்பி மக்கள் வாழ முடியாத சூழ்நிலையில் உள்ளனர். எனவே இம்மக்களை வாழ வைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு இம்மக்கள் ஒடுக்கப்படுவார்களானால் மீண்டும் பயங்கரவாதம், பிரிவினைவாதம் தலைதூக்கும்.

நடந்து முடிந்த யுத்தம் பிரபாகரனின் உருவாக்கம் அல்ல. வரலாற்றை பிரபாகரன் நிர்மாணிக்கவில்லை. வரலாறு தான் பிரபாகரனை உருவாக்கியது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அதிகாரப் பரவலாக்கல் தீர்வாகாது. அவர்கள் சந்திக்கும் நெருக்கடிகளுக்கு தீர்வை வழங்க வேண்டும். அதிகாரத்தை பரவலாக்குவதால் மக்களுக்கு நன்மைகள் கிடைக்கப் போவதில்லை. மாறாக ஒரு சில அரசாங்க சார்பானவர்களே நன்மையடைவார்கள் என்று தெரிவித்தார். (6)

## கையடக்கத் தொலைபேசியூடாக ரயில் ஆசனப் பதிவுகள்

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசியினூடாக ரயில் ஆசனப் பதிவுகளை மேற்கொள்ள ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது. இதற்கான அங்கீகாரம் அமைச்சரவையினால் வழங்கப்பட்டுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்த ரயில்வே திணைக்களம் மொபிடெல் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடவுள்ளது. மொபிடெல் செலியூலர் தொலைபேசி சேவையினூடாக ஆசனப்பதிவு மேற்கொள்வதற்கு வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தியா போன்ற நாடுகளில் ஆசனப் பதிவுகள் செலியூலர் தொலைபேசியினூடாக செய்யப்படுகின்றன.

இதே போன்று எம்மவர்களும் தூர இடங்களிலுள்ள ரயில் நிலையத்திற்கு செல்லாமலேயே தமது கையடக்கத் தொலைபேசியினூடாகப் ஆசனப் பதிவு செய்து கொள்ள முடியும். (6)

## வன்னியிலிருந்த மூவரைக் காணவில்லை; யாழ் மனித உரிமைக் குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

வன்னியில் யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை சித்திரை மாத முற்பகுதியில் முள்ளி வாய்க்கால் பகுதியில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டிற்கு வரும்போது 3 பேர் காணாமல் போனதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் கார்த்திகேசு அருட்கோயில் (வயது 36) காணாமல் போனதாக வவுனியா ஆனந்த குமாரசாமி முகாமில் இருந்து அவரது மனைவி அருட்கோயில் சத்தியதேவி என்பவரால் தபால் மூலம் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதீபன் கலாவதி (வயது 31), பிரதீபன் ரிஷிகேசன் (வயது -5) ஆகியோர் காணாமல் போனதாக திருநெல்வேலியைச் சேர்ந்த ராஜதுரை விஜயலட்சுமி என்பவரால் யாழ் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு செய்யப்பட்டுள்ளது. (ச-7)

## ஆசிரியர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்ய தனியார் நிறுவனங்களின் உதவி

(கொழும்பு)

ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களின் ஆங்கில அறிவை அபிவிருத்தி செய்ய தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டை ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆண்டாக பிரகடனப்படுத்தி உள்ளதால் மாணவர்களின் ஆங்கிலக்கல்வி மேம்பாட்டைக் கருத்தில் கொண்டே இந்தத் திட்டம் மேற்கொள்ளப் படுகிறது.

இத்திட்டத்தின் ஓர் அங்கமாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் மூலம் ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போது இத்திட்டம் ஆறு மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஒன்றரை வருடத்துக்குள் நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 500 கணனி ஆய்வுகூடங்களை அமைக்க உள்ளதாகவும் வடக்கு மற்றும் கிழக்கில் மின்சார வசதி இல்லாத பகுதிகளில் சூரிய சக்தி மூலம் இயங்கும் நிலையங்களை அமைக்கவும் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (6)


CIMA

Chartered Institute of Management Accountants

வளமான எதிர்கால முன்னேற்றத்திற்கு CIMA வுடன் இணையுங்கள்

வியாபார கணக்கியலில் CIMA சான்றிதழ்

(Certificate Course in Business Accounting) 6 மாதங்களைக் கொண்ட முழுநேரம்/பகுதிநேரம்



Mobileatnet Computer Services (MCS) (Listed College) | 324, Palaly Road, Jaffna | Tel: 021 222 6373

Jaffna College Undergraduate Department | 464 Hospital Road, Jaffna | Tel: 021 222 3382, 021 222 3960, 060 221 2531

(C-2648)

பூனை கறுப்போ சிவப்போ எதுவாயினும் சரி எலிபிடித்தால் போதும்.

*- சீனப்பழமொழி*

வலம்புரி

## முகாம் மக்களை மீள்குடியமர்த்துவதில் அதிவேக நடவடிக்கை தேவை

வன்னியில் இடம் பெற்ற யுத்தத்தை தொடர்ந்து ஏற்பட்ட முகாம் வாழ்க்கை பல்லாயிரக்கணக்கான மக்களின் உடல், உள ஆரோக்கியத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தி விட்டது.

யுத்தம் தந்த இழப்புகளுக்கு அப்பால், முகாம் வாழ்வு பலரின் உயிரை பலியெடுத்துவிட்ட தகவல் வெளிவராமல் போனமை துரதிர்ஷ்டமே.

நெருக்கமான மக்கள் கூட்டம், அடிப்படை வசதிகள் அற்ற வாழ்க்கை, போசாக்கின்மை போன்ற காரணங்களால் நோய்வாய்ப்பட்டு பலியாகிப் போனவர்கள் பலர்.

இந்த துயரத்துக்கு முடிபு கட்டுவது மனித நேயமுடைய அனைவரினதும் தலையாய கடமையாகும்.

சுமார் மூன்று இலட்சம் மக்கள் முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டிருக்கும் நிலையில் ஒரு குறிப்பிட்ட மக்கள் மீளக்குடியமர்த்தப்படும் முன் நடவடிக்கை மனதிற்கு ஆறுதல் தருவதாகவுள்ளது.

எனினும் மீள்குடியமர்த்தல் நடவடிக்கையின் வேகம் போதுமானதல்ல என்ற மன உளைச்சல் இருக்கவே செய்கிறது.

மழைகாலம் நெருங்கிவரும் நிலையில் ஆயிரக்கணக்கென்றளவில் மீள்குடியேற்றம் செய்வது பொருத்துடையதாகாது. எனவே இது விடயத்தில் துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுவது கட்டாயமானதாகும்.

முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று இலட்சம் மக்களையும் துரிதகதியில் குடியமர்த்த தவறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களின் உயிருக்கான ஆபத்து அதிகரித்துச் செல்லும். ஆகவே மீள்குடியமர்த்தலில் வேகமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு தனது நிபந்தனைகளைக் குறைக்க வேண்டும்.

உறவினர்கள் பொறுப்பேற்கும் பட்சத்தில் முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்க முடியும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியதை நடைமுறைப்படுத்தினால், மூன்று இலட்சம் மக்களும் விரைவாக குடியமர்வதற்கான சாத்தியம் உருவாகும்.

இதற்கு மேலாக மீள் குடியமரும் மக்களின் நலன் கவனிப்பதற்கான விசேடநடவடிக்கைகள் எடுக்கப்படுவதும்,

மீள் குடியமர்ந்த குடும்பங்களில் இருக்கக் கூடிய படித்த இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதில் விசேட கவனம் செலுத்தப்படுவதும் கட்டாயமானதாகும்.

அதேசமயம் வன்னியில் உயிரிழந்தவர்களுக்கான நட்ட ஈட்டு தொகையையும் அந்தந்த குடும்பங்கள் பெறுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும்.

# இடம்பெயர்ந்த மக்களை சொந்த இடங்களில் குடியமர்த்துவது காலத்தின் கட்டாயமாகும்

## பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணன்

(கொழும்பு)

பல தசாப்தங்களாக நீடித்துச்செல்லும் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினைக் காண்பதற்கு இதுவே தக்க தருணம் என மலையக மக்கள் முன்னணியில் பாராளு மன்ற உறுப்பினரும் வாழ்க்கைத்தொழில், தொழில்நுட்ப பிரதியமைச்சருமான பெ. இராதகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அவசர காலச் சட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அவர் அங்கு உரை நிகழ்த்துகையில்,

நீண்ட காலத்திற்குப்பிறகு தற்போது யுத்தம் முடிவடைந்திருப்பதால் அரசியல் கட்சிகள் இன ,மத பேதங்களை மறந்து சமூதாயத்தினதும் சமூகங்களினதும் மறு மலர்ச்சிக்காகவும் நாட்டின் மேம்பாட்டிற்காகவும் ஒன்றிணைந்து செயல்படும் அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

அகதி முகாம்களிலும் இடம்பெயர்ந்து வவுனியாவில் தவிக்கும் 3 இலட்சம் தமிழர்களினதும் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்தி அவர்களை சொந்த இடங்களில் குடியமர்த்து வது காலத்தின் கட்டாயமாகும்.

தமிழர்கள், சிங்களவர்கள் மீதும் சிங்களவர்கள் தமிழர்கள் மீதும் சந்தேகம் கொண்டு கசப்பான,கறை படிந்த யுகம் மாறி வரும் சூழலில் இன சௌஜன்ய உறவுகளில் ஆத்மார்த்தமான உணர்வுகளுக்கும் உசிதமான நட்புறவுக்கும் வழி காண வேண்டும் நம்பிக்கையும் நற்புறவும் இனங்களிடையே மறுபடியும் மலர வேண்டும்.

கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் பயங்கரவாத சந்தேக நபர்களில் அதிகமானோர் சிறு சிறு விடயங்களுக்காக நீண்ட நாட்களாக சிறை வாசம் அனுபவித்து வருகிறார்கள். அவர்களுக்கு ஜனாதிபதி கருணை காட்டி பொது மன்னிப் வழங்கி புனர்வாழ்வு பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1995ஆம் ஆண்டு முதல் வெலிக்கடை சிறைச்சாலையில் இந்துமத குருவான ரகுபதி சர்மாவும் அவரது மனைவியான ரகுபதி சர்மா வசந்தியும் வைக்கப்பட்டுள்ளார்கள் வசந்தி சர்மா மனநோய் உளச்சல் காரணமாக சிகிச்சை பெற்று வருகின்றார். இவர்களின் பிள்ளைகள் மட்டக்களப்பு இராமகிருஸ்ண மிஷனில் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். அதைப் போலவே அனுராதபுர சிறைச்சாலையில் இருந்து 25 கைதிகளும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்து 45 கைதிகளும் தங்களது துயரங்கள் குறித்து விடுதலைக்கு உதவுமாறு தங்களது குறைகளை ஜனாதிபதிக்கு தெரிவிக்குமாறும் கடிதம் மூலம் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். நாட்டில் அமைதி ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில் இவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும்.

இதேநேரத்தில் பத்திரிகையாளர் திஸ்ஸநாயகம் மீதும் ஜனாதிபதி அவர்கள் கருணை காட்டி மன்னிப்பு வழங்க வேண்டும் என்றார். (6)

## இடம்பெயர் மக்களை மீளக் குடியேற்றுவது குறித்த இலங்கையின் முனைப்பு திருப்தியளிக்கவில்லை

## அமெரிக்கா குற்றச்சாட்டு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை மீளக் குடியேற்றுவது தொடர்பிலான இலங்கை அரசாங்கத்தின் முனைப்பு திருப்தி அளிக்கும் வகையில் அமையப்பெறவில்லை என அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது.

இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் சுதந்திரமாக இடம் நகர முடியாத ஓர் துப்பாக்கிய நிலை காணப்படுவதாக அமெரிக்காவுக்கான ஆசிய பிராந்திய துணை இராஜாங்கச் செயலாளர் ரொபர்ட் ஓ பிளெக் தெரிவித்துள்ளார்.


அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்றில் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இடைத்தங்கல் முகாம்களில் வாழும் மக்கள் சொல் லொணத் துயரங்களை எதிர்நோக்கி வருவதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை நோக்கிய இலங்கை அரசாங்கத்தின் முன்நகர்வுகள் மிகவும் மந்த கதியில் காணப்படுவதாகவும் சுதந்திரமான முறையில் கருத்துக்களை வெளியிடக் கூடிய ஊடக சுதந்திரம் தொடர்பிலும் சர்ச்சை எழுந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் ஜே.எஸ்.திஸ்ஸநாயகத்திற்கு வழங்கப்பட்ட சிறைத் தண்டனை உள்ளிட்ட சம்பவங்கள் தொடப்பில் அமெரிக்கா கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்த அவர்.


மனிதாபிமான தொண்டு நிறுவனங்கள் முகாம்களுக்கு செல்வது குறித்த கெடுபிடிகளில் தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனை அமெரிக்கா வரவேற்பதாகவும் கூறினார். (6)




# ஏன் உயர்த்தப்பட வேண்டும்?

இவ்வுலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில்ல நிலைகளில் உயர்ந்து நிற்க வேண்டும் என்று எண்ணுகிறான். பிறரைக் காட்டிலும் உயாந்தவனாக இருக்க வேண்டும் என்று துடிக்கிறான் படிப்பில் அறிவில் கலைகளில் பதவியில் செல்வத்தில் பலத்தில் எல்லோரையும் விட உயர்ந்து நிற்க வேண்டும் என்று நினைக்கிறான். இப்படி நினைப்பில் தவறில்லை.

ஆனால் எப்படி உயரவேண்டும் என்ற கேள்வியில்தான்



தடுமாறி நிற்கின்றோம். எப்படியும் உயரலாம் என்பதல்ல, இப்படித்தான் உயரவேண்டும் என்ற நியதி இருக்கின்றது. ஏணியின் உச்சிக்கு வர வேண்டும் என்றால் ஒவ்வொரு படியாக கீழிருந்து ஏறிச் செல்ல வேண் டும் அப்படி ஏறும்போது பல சறுக்குகள், பல வீழ்தல்கள், பல காயங்கள், பல உரசல்கள் ஏற்படும் .அவைகளையும் கடந்து

## பரமபிதா காட்டிய பாதை

ஏறி உச்சியை அடையும் போதுதான் உண்மையான பூரிப்பு ஆனந்தம் உவகை மன நிறைவு நம் உள்ளத்தில் நாம் அனுபவிக்க முடியும்.

அது போல ஆன்மீக வாழ்விலும் ஒருவன் உயர வேண்டும். அந்த உயர்வின் உச்சத்தை அனுபூதி என்று அழைக்கின்றோம். இந்த உச்ச அனுபவத்தை அடைவதற்கு ஒவ்வொருவனும் சில மாற்றங்களுக்கு, சவால்களுக்கு உயர்த்தப்படவேண்டும். இந்த மாற்றங்களும் சவால்களும் சமூக வளர்ச்சிக்காக அமைய வேண்டும். இன்றைய நற்செய்தியில் அதைத்தான் பார்க்கின்றோம்.

அதாவது பாவம் என்னும் புற்றுநோயால் அழிந்து கொண்டிருக்கும் நாம் நோய் நீங்கி வாழ்வு பெற ஆண்டவராகிய இயேசு தந்தையின் திட்டப்படி சிலுவையில் உயர்த்தப்பட்டார். இனி உயிர்பிழைப்பதும் உயிர்பிழைக்காததும் வாழ்வைப் பெறுவதும் பெறாமல் விடுவதும் நம் கையில் ஆண்டவர் விட்டிருக்கின்றார். உயிர் பெற வேண்டுமா? வாழ்வு பெற வேண்டுமா ?

சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசுவை உற்று நோக்குவோம் சாதாரணமாக அல்ல அந்த இயேசுவின் திருக்காயங்கள் அவமானங்கள் அனைத்தையும் நினைத்து நம்பிக்கையோடு உற்று நோக்கும் போது நம் நோய்கள் மறைகின்றனர். பேய்கள் ஓடுக்கின்றன, வேதனைகள் தணிகின்றன, சோதனைகள் முறியடிக்கப்படுகின்றன , தோல்விகள் வெற்றி காண்கின்றன.

ஆம் இந்த உலகம் மீட்புப்பெற இந்த உலகம் வாழ்வு பெற இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டது போல் நாம் வாழும் இந்த சமூகம் உயிர் பெற வாழ்வுபெற நாம் ஒவ்வொருவரும் சிலுவையில் உயர்த்தப்படவேண்டும்.

அன்று இயேசுவும் நாம் உயிர்பெற வாழ்வு பெற நமக்காக அந்த கல்வாரி மலையிலே சிலுவையில் அறையப்பட்டு இரண்டு கைகளிலும் இரண்டு கால்களிலும் விலாவிலிருந்தும் இரத்தம் வழிந்தோட உயிர் கொடுத்தார். அந்தச் சிலுவையை உற்று நோக்குவோம் ; உயர்த்தப்பட்ட அந்த சிலுவையை உற்று நோக்கும்போதெல்லாம் நாமும் உயர்த்தப்படுவோம்... உயர்ந்த மனிதராவோம்.

**ஜோன் ரொபேர்ட்**

# கனடாவில் வேலைக்குச் செல்லும் பெண்களின் வீதம் அதிகரிப்பு

உத்தியோகம் புருஷ லட்சணம் என்பது நம் நாட்டு பழமொழி. இந்தப் பழமொழி, சமீபகாலமாக பழைய மொழியாக மாறிவருகிறது. உலக அளவில் பெண்களும் ஆண்களுடன் போட்டியிட்டுக் கொண்டு வேலைக்குச் சென்று வருகிறார்கள். கனடாவில் ஒரு கோடியே 40 இலட்சம் பேர் வேலைக்குச் செல்கிறார்கள்.

அவர்களில் 50.9 சதவீதம் பேர் பெண்கள் ஆவார்கள், அமெரிக்காவிலும் ஆண்களைப் பெண்கள் முந்திவிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

அங்கு இப்போது 13 கோடியே 20 இலட்சம் பேர் வேலைக்குச் செல்கிறார்கள். அவர்களில் 49.8 சதவீம் பேர் பெண்கள் ஆவார்கள். அடுத்த ஆண்டில் பெண்கள் சரி பாதியாகி விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-6)

# திருட வந்தவனை தாக்கியதால் வந்த வினை

இங்கிலாந்தின் ஹைநியூகோம்பே நகரில் ஒரு கோடீஸ்வரர் தனது வீட்டுக்குள் நுழைந்த திருடனை அடித்து உதைக்க போய் தற்போது சிறைத் ளதண்டனையை எதிர்நோக்கி இருக்கிறார். அவரது பெயர் முனிர் ஹுசைன்(52). சம்பவத்தன்று இரவு இவரது வீட்டிற்குள் 3 திருடர்கள் நுழைந்தார்கள். முனிரையும், அவரது மனைவி, மகள், 2 மகன்களையும், கையைக் கட்டிக்கொண்டு தரையில் குப்புறப் படுக்கச் சொன்னார்கள்.

அப்போது முனிரின் இளவயது மகன் அங்கிருந்து ஜன்னல் வழியாக ஏறிக்குதித்து தப்பியோடி விட்டான். இதையறிந்த கொள்ளையர்களில் இருவர், வெளியே ஓடியவன் ஆட்களை அழைத்து வந்து விடுவான் என்று பயந்து அங்கிருந்து தலைதெறிக்க ஓடிவிட்டனர். வாலித் சலீம் என்ற ஒரேயொரு திருடன் மட்டும் மாட்டிக் கொண்டான்.

அவனை முனிர் குடும்பத்தாரும், பொது மக்களும் சேர்ந்து நையப்புடைத்து எடுத்து விட்டனர். வாலித் சலீமின் மண்டை பிளந்து மூளையும் சேதமடைந்தது. இதனால் பொலிஸார் முனிர் மீது வழக்குத் தொடர்ந்து விட்டனர்.

இந்த வழக்கில்தான் கோடீஸ்வரர் முனிர் சிறைத்தண்டனையை எதிர்நோக்கியுள்ளார். எனினும், முனிருக்கு தண்டனை வழங்கினால், அது திருடர்களுக்கும் கொள்ளையர்களுக்கும் கொண்டாட்டம் ஆகிவிடும் என்ற பரவலான கருத்து நிலவுகிறது.

மேலும் திருடன் வாலித் மீது ஏற்கனவே 50 வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்த வழக்கில் இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை. (6)

# பாகிஸ்தானில் தலிபான் தளபதிகள் இருவர் உட்பட 5 தீவிரவாதிகள் கைது



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தலீபான் தளபதிகள் இருவர் உட்பட 5 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

பாகிஸ்தானின் சுவாட் பள்ளத்தாக்குப் பகுதியிலும், மலாக்காண்ட் பகுதியிலும் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகள் இராணுவத்துக்கு எதிராக அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள். இதனால் அவர்களை அடியோடு நசுக்க பாகிஸ்தான் இராணுவம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடந்த 4 மாதங்களாக சுவாட் பள்ளத்தாக்குப் பகுதியில், தலீபான் தீவிரவாத இயக்கத்தின் பிரபல உள்ளூர் தளபதி மவுலானா பசுலுல்லா உட்பட ஆயிரத்து 800 தீவிரவாதிகளை பாகிஸ்தான் கொன்றுள்ளது. தலீபான்களும் மனித வெடிகுண்டு தாக்குதலை நடத்தி பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினருக்கு அடிக்கடி தலைவலி அளித்து வருகிறார்கள்.

இந்த நிலையில், நேற்று முந்தினம் சுவாட் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய அதிரடி தேடுதல் வேட்டையின் போது, தலீபான் தீவிரவாத இயக்கத்தின் செய்தித் தொடர்பாளரும், முக்கியத் தளபதியுமான முஸ்லிம் கான் மற்றும் மூத்த தலீபான் தளபதி மெஹ்மூத் ஆகியோர் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரது தலைக்கும் பாகிஸ்தான் அரசு தலா ஒரு கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர கியூ. பசல் கபார், அப்துல் ரகுமான், சர்தாஜ் கியூ ஆகிய முக்கிய தலைவர்கள் 3 பேரும் கைதானார்கள். இந்த தகவல் பாகிஸ்தான் இராணுவம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

சுவாட் பகுதியில் இருந்து முதன் முதலில் கைது செய்யப்பட்ட மூத்த தலீபான் தளபதி முஸ்லிம் கான் என்பது குறிப்பிடத்தக்கது.(6)

# காங்கிரஸில் இணைவதா? தனிக்கட்சியா? இன்று அறிவிக்கவுள்ளார் நடிகர் விஜய்

(சென்னை)



நடிகர் விஜய் அரசியலில் இறங்க முடிவெடுத்து விட்டார். அதன் முதற்கட்டமாக மக்கள் மன்றம் ஆரம்பித்து பல்வேறு நலத் திட்டங்கள் செய்து வருகிறார்.

இதை அறிந்த காங்கிரஸ் பிரமுகர்கள் அவரை காங்கிரஸில் சேர்த்துவிட முயற்சிகள் மேற்கொண்டனர். அதன்படி ராகுல் - விஜய் சந்திப்பு நடந்தது. இச் சந்திப்பில் சரியான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் நடிகர் விஜய் இன்று சென்னை வடபழனியில் உள்ள திருமண மண்டபத்தில் பத்திரிகையாளர்களை சந்திக்கிறார். அப்போது காங்கிரஸில் இணைவதா, இல்லை தனிக் கட்சி ஆரம்பிப்பதா என்ற தனது நிலைப்பாடு குறித்து அறிவிக்கவிருக்கிறார் என்கிறது விஜய் வட்டாரம். (6)

## — தாய்வானின் முன்னாள் —

# ஜனாதிபதிக்கு ஆயுள்தண்டனை



தாய்வான் முன்னாள் ஜனாதிபதி சென்ஷூ யி பியனுக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதித்து தாய்வான் நீதிமன்றமொன்று தீர்ப்பளித்துள்ளது.

2000-2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதவியிலிருந்த போது 15 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பணத்தை மோசடி செய்தமை மற்றும் லஞ்சமாக பெற்றமை தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு சென்ஷூயி பியன் ஆளாகியுள்ளார்.

சென் ஷூயி பியன் தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். அக்குற்றச்சாட்டுகள் அரசியல் உள்நோக்கம் கருதி தன்மேல் சுமத்தப்பட்டவை என அவர் தெரிவித்தார்.

அத்துடன் ஏற்கனவே சிறைத்தண்டனை அனுபவித்து வரும் சென் ஷூயி பியனின் மனைவியான வு ஷூ சென்னுக்கும் ஊழல் குற்றச்சாட்டின் கீழ் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள் ளது. (6)

# பன்றிக் காய்ச்சல் தடுப்பு மருந்து; விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க மற்றும் அவுஸ்திரேலியா மருத்துவ விஞ்ஞானிகள் கூட்டாக ஆய்வு செய்து பன்றிக் காய்ச்சலுக்கு தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்தீள்ளனர். இந்த மருந்தை ஒரு தடவை அல்லது 2 தடவை கொடுத்தால் பன்றிக் காய்ச்சல் தாக்குவதைத் தடுத்து விடலாம்.

ஒரு தடவை மருந்து கொடுத்தால் 75 சதவீதத்தில் இருந்து 96 சதவீதம் நோய் பரவுதலைத் தடுத்துவிடும்.

இது 8 நாளில் இருந்து 10 நாள் வரை தடுக்கும் வீரியத்துடன்இருக்கும். 2 தடவை மருந்து கொடுத்தால் முற்றிலும் நோயை தடுத்துவிடும் என விஞ்ஞானிகள் சிபாரிசு செய்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் உள்ள சி.எஸ்.எஸ். நிறுவனம் இந்த மருந்தை தயாரிக்கவுள்ளது. அடுத்த மாதத்தில் இம் மருந்து பாவனைக்கு வந்துவிடும். இந்த மருந்து ஏற்கனவே உள்ள சாதாரண புளூ காய்ச்சலுக்குப் பயன்படுத்தலாம். அதற்குக் குறைவான அளவுக்கு மருந்து கொடுத்தால் போதும்.

சாதாரண புளூ காய்ச்சலுக்கு ஏற்கனவே வேறு வகை தடுப்பு மருந்துகளும் உள்ளன. (6)

# கலிபோர்னியாவில் டிஸ்கவரி விண்கலம் தரை இறங்கியது

சர்வதேச விண்வெளி நிலையும் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக அமெரிக்காவின் டிஸ்கவரி விண்கலம் மூலம் 7 விண்வெளி வீரர்கள் சென்றிருந்தனர். இவர்கள் விண்வெளியில் 14 நாட்கள் தங்கியிருந்தனர். கட்டுமானப் பணிகள், கருவிகள் பொருத்துதல் போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபட்டனர்.

பணிகள் முடிந்த நிலையில் இவர்களை சுமந்துசென்ற டிஸ்கவரி விண்கலம் நேற்று முந்தினம் அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள கென்னடி பேஸ் சென்டரில் தரை இறங்குவதாக அறிவிக்கப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது.

ஆனால், அங்கு நிலவிய மோசமான வானிலை காரணமாக டிஸ்கவரி விண்கலத்தை தரையிறக்குவதில் திடீர் சிக்கல் ஏற்பட்டது. எனவே. வானிலை சீரடைந்ததும் தரை இறக்க நாசா விஞ்ஞானிகள் முடிவெடுத்தனர்.

இதற்கிடையே கலிபோர்னியாவில் வானிலை சீராக இருந்தது. எனவே, இங்குள்ள எட்வர்ட்ஸ் இராணுவ மையத்தில் தரை இறக்க முடிவு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து நேற்று முந்தினம் இரவு 8.53 மணிக்கு தரை இறங்கியது. அதில் இருந்து 7 விண்வெளி வீரர்களும் பத்திரமாக வந்து சேர்ந்தனர். (6)

# தொலைக்காட்சி நிகழ்ச்சி நடத்துவதாகக் கூறி பெண்களை சிறைவைத்த மோசடிக் கும்பல்

பிரித்தானிய பிரபல 'பிக் பிரதமர்' நிகழ்ச்சியையொத்த நேரடி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்பதாக நம்பவைத்து துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட 9 பெண்களை துருக்கிய பொலிஸார் மீட்டுள் ளனர்.

தொலைக்காட்சி நிகழ்சியொன்றை நடத்துவதாகத் தெரிவித்து மேற்படி 9 பெண்களையும் றிவா நகரிலுள்ள கட்டிடத்தில் சிறை வைத்த மோசடிக் கும்பல் அவர்களை அவரது உறவினர்கள் பார்ப்பதற்கும் தொடர்பு கொள்வதற்கும் தடைவிதித்துள்ளது.

இதனால் கவலையடைந்த உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். இந்த இடத்தை பொலிஸார் சுற்றிவளைத்த போது மேற்படி மோசடி அம்பலமாகி யுள்ளது. தொலைக்காட்சி நிகழ்ச்சியை நடத்து வதாகக் கூறிய மோசடி பேர்வழிகள் தம்மால் குறிப்பிட்ட கட்டடத்தில் தங்கவைக்கப் பட்டிருந்த 9 பெண்களையும் நிர்வாணமாகப் புகைப்படம் எடுத்து அப் புகைப்படங்களை இணையத்தளம் மூலம் விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடிக் கும்பலைச் சேர்ந்த நால்வரை கைது செய்துள்ள பொலிஸார் தப்பிச் சென்றுள்ள கும்பலின் தலைவரை வலைவீசி தேடி வருகின்றனர். (6)

# பள்ளி நெரிசலில் சிக்கி 5 மாணவிகள் பலி

(டெல்லி)

புதுடெல்லியில் ஒரு பள்ளியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி குறைந்தது 5 மாணவிகள் பலியாகியுள்ளனர்.

மேலும் முப்பது பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தோர் சிலரின் நிலை கவலைக்குரியதாக உள்ளது.

மழையால் ஏற்பட்ட மின்கசிவு காரணமாக பள்ளிக் கட்டடத்தில் மின்சாரம் பாய்வதாக வதந்தி பரவியதால் இந்த நெரிசல் ஏற்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சம்பவம் நடந்த பள்ளிக்கு வெளியே கோபம் கொண்ட பெற்றோர்கள் கூடியதும் அந்தப் பகுதியில் இருந்தோரை பொலிஸார் அப்புறப்படுத்தினர்.

இந்திய அரசு இந்தச் சம்பவம் குறித்து விசாரிக்க உத்தரவிட்டுள்ளது. (ஓ-6)

# மத்யூஸின் வேகத்தில் இந்தியா சுருண்டது; இலங்கை 139 ஓட்டங்களால் அபார வெற்றி


ஜெயசூரியா

(கொழும்பு)

அஞ்சலோ, மத்யூஸின் துல்லியமான வேகத்தின் மூலம் இலங்கை அணி 139 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தியது.

இலங்கை, இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதும் முத்தரப்பு ஒரு நாள் போட்டிகள் கொழும்பில் நடைபெற்று வருகிறது.

இதில் நியூசிலாந்து அணி தான் விளையாடிய இரு லீக் போட்டிகளிலும் தோல்வியடைந்து முத்தரப்பு தொடரிலிருந்து வெளியேறிய நிலையில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற இலங்கை, இந்திய அணிகள் மூன்றாவதும் இறுதியுமான லீக் போட்டியில் நேற்று மோதின.

இரு அணிகளுக்கும் எதிர்பார்பற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு டில்சான்-ஜெயசூர்யா ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 8.4 ஓவர்களில் 57 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது டில்சான் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மஹேல ஜெயவர்தன நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் ஜெயசூர்யா அதிரடியில் இலங்கை அணியின் ஓட்டஎண்ணிக்கை மளமள என அதிகரித்தது.

எனினும் மஹேல ஜெயவர்தன 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் சங்கக்கார 5 ஓட்டங்களுடன் வந்த வேகத்திலேயே அரங்கு திரும்பினார்.

இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த ஜெயசூர்யா-மத்யூஸ் ஜோடி சிறப்பாக துடுப்பெடுத்தாடியது.

இதில் ஆரம்பம் முதலே அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய சனத் ஜெயசூர்யா 45 ஆவது பந்தில் அரைச்சதம் கடந்தார்.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி 25.4 ஓவர்களில் 150 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் சனத் ஜெயசூர்யா 79 பந்துகளில் (13 பவுன்டரிகள் உட்பட) 98 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்து 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சதம் பெறும் வாய்ப்பையிழந்தார்.

தொடர்ந்து கண்டாம்பி களமிறங்க மறுமுனையில் மத்யூஸ் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 30.5 ஓவர்களில் 176 ஓட்டங்களை எடுத்து 5 ஆவது விக்கெட்டையிழந்தது.

இந்நிலையில் 6 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த கண்டாம்பி-கபுகெதர ஜோடியின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி 44.2 ஓவர்களில் 250 ஓட்டங்களைப்பூர்த்தி செய்தது.

இதில் கபுகெ தர 43 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 36 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் குலசேகர களமிறங்க மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய கண்டம்பி 56 பந்துகளில் 50 ஓட்டங்களைக்கடந்தார்.

தொடர்ந்து கண்டம்பியின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்க ளையிழந்து 307 ஓட்டங்களைக்குவித்தது.

இதில் கண்டம்பி 73 பந்துகளில்(11 பவுண்டரிகள் உட்பட) 91 ஓட்டங்களையும் குலசேகர 3 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் நெகரா, இஷாந்த் சர்மா, ஹர்பஜன் சிங்,யூசுப் பதான் மற்றும் ரெய்னா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.



பதிலுக்கு 50 ஓவர்களில் 308 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அஞ்சலோ, மத்யூசின் துல்லியமான வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் 37.2 ஓவர்களில் 168 ஓட்டங்களை மாத்திர மெடுத்து சகல விக்கெட்டுக்களையிழந்தது 139 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்விய டைந்தது.

இதில் ராகுல் டிராவிற் 56 பந்துகளில்(3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 47 ஓட்டங்களையும்,டெண்டுல்கர் 27 ஓட்டங் களையும், ஆர்.பி.சிங் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அஞ்சலோ, மத்யூஸ் 6 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களைக் கொடு த்து 6விக்கெட்டுக்களையும்குலசேகர,துஷார,மலிங்க மற்றும் மெண்டிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப் போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு திருப்புமுனை அமைந்த அஞ்சலோ மத்யூஸ் ஆட்டநாயகனாக தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி லீக் சுற்றின் இரு போட்டிகளிலும் வெற்றி பெற்று 10 புள்ளி பெற்றது.

இத் தொடரில் கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நாளை நடை பெற வுள்ள இறுதிப்போட்டியில் இலங்கை இந்திய அணிகள் மோதுகின்றன.

## சச்சினின் ஆலோசனையை ஐ.சி.சி. வரவேற்றுள்ளது

(லண்டன்)

சர்வதேச ஒருநாள் போட்டியை விறுவிறுப்பாக்க சச்சின் தெரிவித்த ஆலோசனைக்கு, சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) வரவேற்பு தெரிவித்துள்ளது.

இருபது-20 போட்டியின் வளர்ச்சியால் டெஸ்ட், ஒருநாள் போட்டிகளுக்கு வரவேற்பு குறைந்து வருகிறது. இதையடுத்து ஒரு நாள் போட்டிகளை 25 ஓவர்கள் வீதம் 4 இன்னிங்ஸுகளாகப் பிரித்து விளையாடலாம் என இந்திய வீரர் சச்சின் கருத்துத் தெரிவித்திருந்தார்.

சச்சினின் இந்தக்கருத்தை பரிசீலிக்க இருப்பதாக ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐ.சி.சி. கிரிக்கெட் முகாமையாளர் டேவ் ரிச்சர்ட்ஸன் கூறியதாவது;

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் மாற்றம் செய்வது குறித்த சச்சின் கருத்தை வரவேற்கிறேன். முதலில் தென்னாபிரிக்க இந்தக் கருத்தை பரிசீலித்து பார்க்கும் என நம்புகிறேன். இரு அணிகளும் பகலில் 25, மின்னொளியில் 25 ஓவர்கள் என விளையாடுவதால் வெற்றி தோல்விக்கு நாணயச் சுழற்சி காரணமாக இருக்காது.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் முதல் தர துடுப்பாட்ட வீரர்கள் சதம் கடந்துவிட்டால் முதல் நான்கு வீரர்களுடன் இன்னிங்ஸ் முடிந்துவிடும்.

இந்நிலையில் 25 ஓவர்களாக பிரித்து விளையாடும் போது இரண்டு போட்டிகளாக பிரித்து விளையாட வேண்டியதில்லை. இதனால் ஆரம்ப வீரர்கள் மறுபடியும் விளையாடுவதை தவிர்க்கலாம். இவ்வாறு ரிச்சர்ட்சன் தெரிவித்தார்.

லண்டன் நேருமையத்தில் நடந்த ரஞ்சி நினைவு கருத்தரங்கில் முன்னாள் இந்திய வீரர் கவாஸ்கர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

விழாவில் மெரில்போன் கிரிக்கெட் கழக முன்னாள்தலைவர் ரொபின் மர்லர் பேசுகையில் இந்தியாவின் சச்சின் போன்ற நட்சத்திர வீரர்களால்தான டெஸ்ட் போட்டிகளுக்கு அதிகளவில் பார்வையாளர்களை ஈர்க்கமுடியும்.

வளமான நிதிநிலையை கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) நிர்வாகம் டெஸ்ட் போட்டியை வர்த்தக ரீதியில் மாற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்றார்.

# 'நம்பிக்கைதான் எனது வெற்றியின் இரகசியம்'

## 'மின்னல் மனிதன்' உசைன் போல்ட் மனம் திறக்கிறார்


போல்ட்

பீஜிங் ஒலிம்பிக்கில் (2008) மூன்று, பேர்லின் உலக சம்பியன்ஷிப் தொடரில் மூன்று என குறுகிய காலத்தில் 6 தங்கப் பதக்கம் வென்று அசத்தியுள்ளார் மின்னல் மனிதன் உசைன் போல்ட்.

ஜமெக்காவை சோந்த 23 வயது இளம் வீரர் போல்ட் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் புதிய உலக சாதனையை பேர்லினில் படைத்தார்.

தனது வெற்றி மற்றும் சாதனைகள் குறித்து போல்ட் அளித்த சிறிய பேட்டியில் ,

**பெர்லினில் நடந்த உலகக்கோப்பை தடகளப் போட்டிகளில் உலக சாதனை படைத்தது மகிழ்ச்சி அளித்ததா?**

சாதனை படைத்தது மகிழ்ச்சிதான். இருப்பினும் சாதனைகளை விட வெற்றியே சிறந்தது எனக் கருதுகிறேன்.

**100 மீற்றர் தூரத்தை 9.4 வினாடிகளில் கடக்க முடியும் என்று நீங்கள் கூறியிருப்பது பற்றி ?**

உறுதியாகக் கூறவில்லை.இருப்பினும் நம்பிக்கையுடன் செயல்பட்டால் சாதிக்க முடியும் எனக் கருதுகிறேன்.

**2012 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக்கில் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்க உள்ளீர்களா?**

100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் பங்கேற்கவே விரும்புகிறேன். ஆனால் எனது பயிற்சியாளர் 400 மீற்றர் போட்டியிலும் சாதிக்க வேண்டும் என உற்சாகம் அளித்து வருகிறார். அவரது விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவுள் ளேன்

**ஓட்டப் போட்டியைத் தவிர வேறு போட்டிகளில் பங்கேற்க விரும்புகிறீர் களா?**

நீளம் தாண்டுதலில் பங்கேற்க விரும்புகிறேன்.நீண்ட நாட்களாக இந்த ஆசை எனது மனத்தில் உள்ளது.

நீளம் தாண் டுதலில் அமெரிக்காவின் முன்னாள் வீரர் மைக் பாவலின் (8.95 மீற்றர்) சாதனையை தகர்க்க வேண்டும். முறையாகப் பயிற்சி செய் தால் 9 மீற்றர் தூரம் நீளம் தாண்ட முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

**நீங்கள் ரசிக்கும் மற்ற விளையாட்டுப் போட்டிகள் எவை ?**

கால்பந்து ,கிரிக்கெட்,டென்னிஸ் போட்டிகளை ரசித்துப் பார்ப்பேன்.

**உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன?**

வெற்றி பெற வேண்டும் என பிரத்தி யேகமாக பயிற்சி மேற்கொள்வதில்லை.

போட்டி களுக்கு முன்மிகவும் ரிலாக்சாக இருப்பேன்.தவிர நம்பிக்கை தான் எனது வெற்றியின் ரகசியம்.

**போட்டி இல்லாத நேரங்களில் என்ன செய்வீர்கள் ?**

போட்டிகள் இல்லாத நேரங்களில் நன்றாகத் தூங்குவேன்.

வீடியோக்கேம் விளையாடுவது, இசை கேட்பது மிகவும் பிடிக்கும்.

**தற்போது எந்த தொடருக்கு தயாராகி வருகிறீர்கள் ?**

அடுத்த ஆண்டு இந்தியாவில் நடக்கும் காமன்வெல்த் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்கு தயாராகி வருகிறேன் என்றார்.

## அமெரிக்க அரசின் ஆதர...

இதன்படி சர்வதேச பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான சட்ட ஆராய்வு பற்றிய விசாரணைகளை கண்காணிக்கும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அனுசரணை யுடன் சட்டமா அதிபர் திணைக்களமும் பாதுகாப்பு அமைச்சும் இணைந்து விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுக்கு எதி ரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் நீதி மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறக்கொட இது குறித்து தேவையான சகல ஏற்பாடுகளையும் சட்டமா அதிபர் திணைக்களமும் பாதுகாப்பு அமைச்சும் இணைந்து அமெரிக்க பென்டகன் பாதுகாப்புத் திணைக்களத்துடன் மேற்கொள்ள இருப்பதாக சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பான ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள சட்டமா அதிபர் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சுகத் கம்லத் இவ்வார இறுதியில் அமெரிக்கா செல்லவுள்ளனர்.

அமெரிக்கா, பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அணுகிய நடைமுறைகள் பற்றி ஆராய இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து பயங்கரவாத தடுப்பு சட்டம் மற்றும் அவசரகால விதிகள் சட்டப்படி தடுப்புக் காவலின் கீழ் இருக்கும் சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான விடுத்லைப்புலி உறுப்பினர்களுக்கு எதிரான சட்ட புலனாய்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்த இந் நாட்டு சட்ட நிபுணர்களையும் அமெரிக்காவுக்கு அனுப்பி அவர்களுக்கு பயிற்சி வழங்கவும் அரசு தீர்மானித்துள்ளது. (ச-5)

## தேர்தல் சட்டதிருத்த மூல...

மன்றத்தில் மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மை வாக்குகள் பெறப்பட வேண்டும் என்றும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் ஆணைபெறப்பட வேண்டும் என உயர் நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

1981ஆம் ஆண்டு 1ஆம் இலக்க நாடாளுமன்றத்தேர்தல் சட்டத்தை திருத்துவதற் க்கான சட்டமூலம் என்ற பெயரில் ஓகஸ்ட் 6ஆம் திகதி மேற்படி திருத்தச் சட்டத்தை பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க நாடாளுமன்றில் சமர்ப்பித்திருந்தார். (ச-7)

## சர்வகட்சிக்...

தாம் ஜனாதிபதிக்கு வழங்கியதாகவும் அதனை ஆராய்ந்து தனது பதிலை தெரிவிக்குமாறு ஜனாதிபதியிடம் தாம் கோரி யதாகவும் திஸ்ஸ விதாரண கூறியிருந்தார்.

திஸ்ஸ விதாரண வெளியிட்டுள்ள விடயங்கள் குறித்து ஜனாதிபதி செயலாளரிடம் கேட்ட போது சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனைகள் உத்தியோகபூர் வமாக ஜனாதிபதிக்கு கிடைக்கவில்லை என்பதை தான் உறுதியாக கூறுவதாக தெரிவித்துள்ளார். (ச-5)

## வவுனியாவிலிரு...

காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை இக் கொள்ளைச் சம்பவங்களை தடுக்கும் பொருட்டு பொலிஸாரை இரவு நேரத்தில் யாழ்.பஸ் நிலையத்தில் கடமையாற்றுமாறு பணிக்கவுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். (ச-27)

## ரெலிகொமின்...

செய்துள்ளது. மெஹீஸ் நிறுவனத்தை ரெலிகொம் பங்குகளைப் பெறும் கொடுக்கல் வாங்கல்களுக்காக இலங்கைக்கு அழைத்துச்சென்றவர்கள் ஜனாதிபதிக்கு நெருக்கமான ரொஷான் காரியபெரும மற்றும் பிரியந்த காரியபெரும ஆகிய இருவரே என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெஹீஸ் தொலைபேசி நிறுவனம் உள்ளிட்ட மலேசியாவில் உள்ள பல நிறுவனங் களிற்கு சொந்தக்கா ரான யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ஆனந்த கிருஸ்ணன் மலேசிய நாட்டின் இரண்பாவதுநிலையில் இருக்கும் மிகப்பெரிய செல்வந்தர் என்பது குறிப்பித்தக்கது. (ச-5)

## வேகமாகச் சென்ற...

நிலைகுலைந்த கார் மதிலுடன் மோதுண்டது குறித்த காரை சிரேஸ்ட சட்டத்தரணி ஒருவர் செலுத்திவந்தார் எனத் தெரிவிக்கப்படு கின்றது

சம்பவ இடத்திற்கு வந்த படை அதிகாரிகளும் பொலிசாரும் இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டனர். (ந-5)


புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses... பதிவுகளை 15 09 2009 முன்னர் செய்யுங்கள்
# Microsoft Office * English * Accounting
*DTP,Hardware * Web Developing
* Video Editing *AutoCAD * VB.net,LINUX
International Courses...
MCP_Microsoft Certified Professional
MCSE_Microsoft.Engineer,CIMA,IELTS
Sun Java programmer,Cisco-CCNA,ICDL
Degree Course * BIT Semester 1,3 & 5,Project
மேலதிக விபரங்களுக்கு நேரில்
324, பலாலி வீதி,யாழ்ப்பாணம்
பரமேஸ்வரா சந்தி அருகில், MCS
Bus Route - 764 0772395895 Supported By UNDP/JRRP



படிவங்கள் விற்பனையாகிறது

1) தேசிய கல்வியியற் கல்லூரிகளிற்கான அனுமதி - 2010
2) இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வேலையற்ற பட்டதாரிகள் பற்றிய தகவல் சேகரிப்புப் படிவம்
3) வளிமண்டலவியல் அவதானி/ வளிமண்டலவியல் தொடர்பாளர் பதவி
4) பொலிஸ் பதவிக்கான விண்ணப்பம் (ஆண், பெண்)
5) மறியல்சாலை மோட்டார் வாகன சாரதி பதவிகள் படிவம்

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல. 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(C-3306)






AFTER A/L
STUDY MEDICINE
BE A DOCTOR

யாழ்ப்பாணத்திற்கான குழு விஜயம் செப்டம்பர் 15,16 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில். மாணவர்கள் 2009 - 2010 கல்வியாண்டுக்கான அனுமதிகளுக்கு விண்ணப்பிக்கலாம். உங்கள் அனைத்து கல்வித் சான்றிதழ்கள், கடவுச் சீட்டுப் பிரதி, பிறப்புச் சான்றிதழ் மற்றும் அனுமதிக்கட்டணம் என்பவற்றுடன் சமூகமளிக்கவும்.





O/L, A/L முடித்த மற்றும் பரீட்சை பெறுபேற்றுக்காக காத்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

Nepal
MBBS
Bachelor of Medicine / Bachelor of Surgery
Degree awarded by
KATHMANDU UNIVERSITY
4½ வருடம் + உள்ளகப் பயிற்சி (ஆங்கிலமொழி) கற்கைநெறிக்கான கட்டணம் கிட்டத்தட்ட Rs. 780000 (8 தவணைகள்)

Belarus
(Eastern Europe)
MD
Doctor of Medicine
Degree awarded by
VITEBSK STATE MEDICAL UNIVERSITY
6 வருடம் (ஆங்கிலமொழி) கற்கை நெறிக்கானகட்டணம் வருடத்துக்கு 3800 டொலர்

Lithuania
(Schengen & E.U.)
MD
Doctor of Medicine
Degree awarded by
KAUNAS UNIVERSITY OF MEDICINE
6 வருடம் (ஆங்கிலமொழி) கற்கைநெறிக்கான கட்டணம் வருடாந்தம் 5500 யூரோ

Colombo Ads: 077 244 24 25
MBBS/ MD Degree recognised by Medical Council in Sri Lanka, Maldives, USA, UK, WHO & worldwide.
Hotline: 077 3017883 (Tamil)
PATHE ACADEMY
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
Overseas Student Placement Department
111- 1/2, Maya Avenue, Kirulapona, Colombo- 06 Tel : 2586418 www.patheacademy.org
(C-3303)



Apply Now Sep/Oct 2009 Intake
குறைந்த கட்டணத்தில் UK யில் கல்வி கற்க
BA, BBA, MBA, BSc, MSc,
After graduation two years workpermit
DENTAL NURSE? SOCIAL CARER? GENERAL NURSE?
With Possible Employment Or... What would you like to become tomorrow?

VISA CONSULTANCY
to Any Country, Any Category
Fresh, Re Apply, Appeal
Filling visa application forms
Lawyer's Guidance,100% Success Rate

Nursing Courses,
Pharmacy Courses,
Marketing Courses
Certificate Courses,
Diploma Courses,
Undergraduate Courses,
Postgraduate Courses
and many more courses........

Bank Balance, Student Loan
Sponsor Facilities available
Conditions apply
எம் மூலம் விண்ணப்பித்து பூரண பலனை அடைந்தவர்களின் விபரங்கள் எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்
Student, Visit Business, Migration மற்றும் Settlement, Working holiday Maker ஆகியவற்றுக்கான (Visa) ஒழுங்குகள் மற்றும் Documentation செய்து தரப்படும்
சகல பாடநெறிகளும் குறைந்த கட்டணத்துடன் பயிலும் வசதி
அடிப்படை தகைமை O\L. IELTS அவசியமில்லை
குறிப்பு:-
எமது நிறுவனத்தின் சகல விசா செயற்பாடுகளும் அனுபவம் வாய்ந்தஉள்நாட்டு மற்றும் வெள்நாட்டில் வசிக்கும் சட்டத்தரணிகளால் செய்து தரப்படுகின்றன.
PARANAN ASSOCIATES (PTE) LTD
403,1/1 Galle Road, Wellawatte, Colombo- 6. T.P:2551241 Fax:2507932
Mobile:0777-370292 www.paranan.com email: info@paranan.com
Universal College of Education
Tel: 7203343, 0777-877176
(C-3304)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.09.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.